விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 212 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 03 செவ்வாய்க்கிழமை (19.07.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## பிரபாகரன் இருந்திருந்தால் அரசியல்வாதிகள் இப்படி ஆடமாட்டார்கள்



சரத் பொன்சேகா

03 பக்கம் பார்க்க

## 21 ஆம் திகதி முதல் பெற்றோல், டீசல் தொடர்ச்சியாக விநியோகம்

03 பக்கம் பார்க்க

### ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில்

# பிரித்தானியாவின் ஆதரவுடன் விசாரணைகள் நடைபெறும்

### பதில் ஜனாதிபதி ரணில் விசேட உரை

- 19ஆவது திருத்தம் மீண்டும் அமுலாகும்.
- நாட்டின் அமைதியை சீர்குலைக்க சதி.
- நாட்டை மீட்டெடுக்க ஒன்றுபடுவோம்.



பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களுக்கு நேற்று விசேட உரையொன்றை நிகழ்த்தியுள்ளார்.

அதில், மே 13ஆம் திகதி தாம் பிரதமராகப் பதவியேற்றபோது, நாளொன் 15

## ஆட்டோ கட்டணம் குறைப்பு

(கொழும்பு)

எரிபொருள் விலை திருத்தத்திற்கு அமைவாக முச்சக்கரவண்டிக் கட்டணங்களை குறைப் 15

## பஸ் கட்டணத்தை குறைப்பதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

எரிபொருள்விலை குறைப்பிற்கு அமைய பஸ் கட்டணங்களை குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு 15

### நாடளாவிய ரீதியில்

# அவசர நிலை அமுலானது

### ஜனாதிபதித் தேர்வை முன்னிட்டு பதில் ஜனாதிபதியால் பிரகடனம்

*(கொழும்பு)* நாடளாவிய ரீதியில் பொது அவசர நிலை அமுல்படுத்தப்பட்டுள்ளது. ஜனாதிபதித் தேர்வை முன்னிட்டு பதில் ஜனாதிபதி ரணிலின் பணிப்பின் பேரில் அவசரகாலச்சட்டம் அமுலாகும் வகையில் அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)

### மாத இறுதியில்

## எரிவாயு விநியோகம் சீராகும்

(கொழும்பு)

லிட்ரோ எரிவாயு விநியோகம் தற்போது நாட்டின் பெரும் 15

### தெல்லிப்பழையில்

## வாள்வெட்டு தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழையில் இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதலில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

படுகாயங்களுக்குள்ளான அவர் 15

## 'மக்கள் போராட்ட பிரஜைகள்'

### புதிய கட்சியை ஆரம்பிக்கும் காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள்

(கொழும்பு)

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் "மக்கள் போராட்ட பிரஜைகள்" என்ற புதிய அரசியல் கட்சியை பதிவு செய்வதற்கான ஆவணங்களை தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவரிடம் நேற்று கையளித்துள்ளனர்.

தேர்தல்கள் ஆணைக்குழு அலுவலகத்துக்குச் சென்று ஆவணங்களை ஒப்படைத்ததாக போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

(ம-7)

### வவுனியா எரிபொருள் நிரப்பு நிலையத்தில்

## மதகுரு ஒருவர் மீது பொலிஸார் தாக்குதல்

### வீதியை மறித்து மக்கள் ஆர்ப்பாட்டம்



(வவுனியா)

வவுனியாவில் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மதகுரு ஒருவரை 15

## அவசரகால பிரகடனத்தை மீளப் பெற வேண்டும்

### சட்டத்தரணிகள் சங்கம் ரணிலிடம் கோரிக்கை

(கொழும்பு)

பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அமுல்படுத்தப்பட்டுள்ள அவசர காலநிலை பிரகடனத்தை உடனடியாக நீக்க வேண்டுமென இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

அத்துடன், பொதுமக்களின் அடிப்படை உரிமைகளை உறு 15

## பாராளுமன்றை சுற்றி பலத்த பாதுகாப்பு; ஜனாதிபதி தேர்வுக்கான வேட்புமனு இன்று

(கொழும்பு)

பாராளுமன்ற வளாகத்தைச் சுற்றி பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அனைத்து நுழைவாயில்களுக்கும் வீதித் தடைகள் [illegible] வும் தெரிவிக்கப்படுகிறது.

இன்று காலை 10 மணிக்கு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் பாராளுமன்றம் கூடவுள்ளது.

புதிய ஜனாதிபதியை நியமிப்பதற்கான வேட்புமனு இன்று தாக்கல் செய்யப்படவுள்ளது.

அதனைத் தொடர்ந்து, நாளை இது தொடர்பான இரகசிய வாக்கெடுப்பு இடம்பெற்று புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்படவுள்ளார். (ம-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்

# மயில்வாகனம் வினாசித்தம்பி

## ( முன்னாள் உரிமையாளர் – குகன் ஸ்ரோஸ், பளை )



அல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் புலோப்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் வினாசித்தம்பி (முன்னாள் உரிமையாளர் - குகன் ஸ்ரோஸ், பளை) அவர்கள் கடந்த 12.07.2022 (செவ்வாய்க்கிழமை) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் தெய்வானைப்பிள்ளை (மாது) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வர்களான சின்னத்தம்பி - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமனும் குசேலா (லண்டன்), குகதாஸ் (இந்தியா), பிரேமதாஸ் (லண்டன்), கோகிலதாஸ் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் குணரத்தினம் (லண்டன்), லதா (இந்தியா), டயாதேவி (லண்டன்), காந்தரூபி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் இளமாறன் + ஜனனீதா (லண்டன்), இந்துஜா + சுஜாகன் (லண்டன்), கஸ்தூரி + பிரகாஷன் (நெதர்லான்ட்), மகிழ்ராஜ் (இந்தியா), பிரதுஜா (லண்டன்), பிரதோஸ் (லண்டன்), பிருத்திகா (லண்டன்), நிதுஷன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாத்தாவும் அபிநயா (லண்டன்), அஞ்சலிக்கா (லண்டன்), ஆரியன் (நெதர்லான்ட்) ஆகியோரின் அன்புப் பூட்டனும் காலஞ்சென்றவர்களான கனகசபை, குஞ்சுப்பிள்ளை, தம்பிராசா (துரை), தம்பித்துரை, செல்லையா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் யோகம்மா, பூரணம், பாக்கியம், தனலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ் சென்றவர்களான சின்னத்தம்பி - வள்ளிப்பிள்ளை, காலஞ் சென்ற பீற்றர்பெனடிற் மற்றும் தனலக்ஸ்மி, காலஞ்சென்ற வர்களான சின்னத்துரை - லக்ஸ்மி, காலஞ்சென்ற பஞ்சாட்சரம் மற்றும் செல்வராணி ஆகியோரின் அன்பு சம்பந்தியும் மனோகரசிங்கம் (கனடா), நிமலமோகன் (சுவிஸ்), பத்மராணி, நிமலரங்கன், நிமலரூபன் ஆகியோரின் அன்புச் சிறிய தந்தையும் கமலாதேவி, சரோஜாதேவி, சரஸ்வதி, பொன்னுத்துரை, யோகலிங்கம் (கனடா), யோகேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புத் தாய் மாமனும் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை, புஸ்பமலர், காலஞ்சென்ற நடராஜா, மலர் தம்பதியரின் அன்பு மைத்துனரும் சுரேஸ்குமார் குடும்பம் (கனடா), சிவகுமார் குடும்பம் (இலங்கை), நந்தகுமார் குடும்பம் (கனடா), உதயகுமார் குடும்பம் (கனடா), தயா குடும்பம் (இலங்கை), கண்ணன் குடும்பம் (இலங்கை), கேமா குடும்பம் (இலங்கை) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக் கிரியைகள் நாளை (20.07.2022) புதன்கிழமை புலோப்பளை, பளையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக புலோப்பளை பொத்பத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:

| | |
|---|---|
| குகதாஸ் (இந்தியா) | : 0091 98400 46208, 0091 98408 46206 |
| குணரத்தினம் (லண்டன்) | : 0044781 755 4893 |
| பிரேமதாஸ் (லண்டன்) | : 0044 777 380 3807 |
| கோகிலதாஸ் (லண்டன்) | : 0044 787 514 9229 |
| இலங்கை | : 0094 766 094 532, 0094 776 462 081 |

(C-3624)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல் :-
குடும்பத்தினர்

# பிரபாகரன் இப்போது இருந்திருந்தால்

# அரசியல்வாதிகள் இப்படி ஆட்டம் போட மாட்டார்கள்

## சரத்பொன்சேகா வெளிப்படை





**(கொழும்பு) விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இருந்திருந்தால், இலங்கை அரசியல்வாதிகள் தற்போது நடந்துகொள்வது போல் பைத்தியகாரத்தனமாக நடந்து கொள்ள மாட்டார்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று முன் தினம் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

நாங்கள் நாட்டுக்காக செய்த அர்ப்பணிப்புகளின் பிரதிபலன்கள் இன்னும் கிடைக்கவில்லை. ஒரு வேளை பிரபாகரன் இருந்திருப்பார் என்றால், நாட்டின் அரசியல்வாதிகள் இப்படி மேலும் கீழும் குதித்து பைத்தியக்காரத்தனமாக நடந்துகொள்ள மாட்டார்கள்.

நான் ஜனாதிபதிப் பதவிக்கு போட்டியிடவில்லை. அப் பதவிக்கு நான்கு பேர் போட்டியிடுகின்றனர். எமது கட்சியின் தலைவர் மற்றும் மேலும் மூன்று பேர் போட்டியிடுகின்றனர். பாராளுமன்றத்தில் முடிவுகளை காணமுடியும்.

விக்னேஸ்வரன் வாக்களிப்பதில்லை என அறிவித்துள்ளார். அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் அல்ல.

அவர்கள் தமது தனிப்பட்ட அரசியல் நிலைப்பாடுகளில் இருக்கலாம். பாராளுமன்றத்தில் பொதுஜன பெரமுனவுக்கு அதிகளவான வாக்குகள் இருக்கின்றன. சுமார் 150 வாக்குகள் இருக்கின்றன.

பொதுஜன பெரமுனவின் வாக்குகள் சரிசமமாக பிரிந்தால், எமக்கு சாதகமாக அமையும். அந்த கட்சியின் வாக்குகள் சமமாக பிரியுமா என்பதில் எனக்கு சந்தேகம் இருக்கின்றது.

ஒரு வேளை ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவாகி, சஜித் பிரேமதாஸவுக்கு பிரதமர் பதவியை வழங்கினால், ஏற்றுக் கொள்ளாமல் இருப்பதற்கான காரணங்கள் எதுவுமில்லை.

அப்படி பொறுப்பேற்றால், கோட்டாபயவின் பிரதமர் ரணில் போன்று இருந்தால், அதில் பயனில்லை. 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை மீண்டும் கொண்டு வந்து, அப்படியான அதிகார மாற்றங்கள் ஏற்பட்டால் மாத்திரமே பிரதமர் பதவியை பெற்றுக்கொள்ள வேண்டும் என நான் நினைக்கின்றேன்.

சஜித் பிரேமதாஸவை போராட்டகாரர்கள் விரும்புகிறார்களா இல்லையா என்பதை போராட்டக்காரர்களிடமும் சஜித்திடமும் கேட்க வேண்டும். நான் தொடர்ந்தும் போராட்டம் தொடர்பில் அவர்களுக்கு சார்பாக பேசி வந்தேன் என்பதால், போராட்டக்காரர்கள் என்னை விரும்புகின்றனர்.

அரசியல்' கலாசாரம் மாற வேண்டும் என்ற நிலைப்பாட்டில் போராட்டக்காரர்கள் இருந்தால், நான் அவர்களுடன் இருப்பேன். கோட்டாபய சென்ற பின்னர், பாராளுமன்றம் ஆட்சியை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சிலர் கூறுகின்றனர்.

பாராளுமன்றத்தில் இருப்பவர்களில் பாதிக்கு மேற்பட்டோர் திருடர்கள். நாட்டின் அரசியல் கலாசாரத்தை பாராளுமன்றத்தில் இருப்பவர்களே அழித்துள்ளனர். மக்களுக்கு என்ன தேவை என்பதை போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் ஆழமாக சிந்தித்து புரிந்து கொள்ள வேண்டும். மக்கள் மாற்றத்தை கோருகின்றனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் சிக்கல்களை கலையாமல் நாடு சென்றால், இந்த நாடு வறியவர்கள் இருக்கும் நாடாக தொடர்ந்தும் இருக்கும்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவிக்கு வந்து போராட்டத்தை அடக்குவதற்கு இது 1989 ஆம் ஆண்டு அல்ல. துப்பாக்கிச் சூடு நடத்தி இராணுவத்தை பயன்படுத்தி அடக்குவதை தற்போதைய உலகம் ஏற்றுக்கொள்ளாது.

இதனை ரணில் புரிந்து கொள்ள வேண்டும். கட்டாயம் தற்போதைய அரசியல் முறை தொடர்பில் வெறுப்பு இருக்கின்றது. இந்த அரசியல் கலாசாரமே நாட்டை அழித்தது என சரத் பொன்சேகா தெரிவித்தார். (நி)

# 7ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 18 . 07 . 1949

இறப்பு 08 . 07 . 2015



அமரர். **கதிரவேலு சந்திரலிங்கம்**

(ஓய்வுநிலை மேற்பார்வையாளர் அச்சுவேலி பனை தென்னை அ.கூ.சங்கம்)

ஆண்டுகள் ஏழு ஓடி மறைந்தாலும்
ஏழேழு ஜென்மம் எடுத்தாலும்
உங்கள் நினைவுகள்
எம் நெஞ்சங்களை விட்டகலாது
அன்பின் உயிராய்
எம் நெஞ்சங்களில்
என்றும் நீங்காமல் நிலைத்து
வாழ்வீர்கள் அப்பா ...

(12181)

கட்டைப்பிராய், யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

# 21 ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக எரிபொருள் விநியோகம்

## இலங்கை கனிய வள கூட்டுத்தாபனம்

(கொழும்பு)

எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் 92 ரக பெற்றோல் மற்றும் டீசலை மக்களுக்கு தொடர்ச்சியாக விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக இலங்கை கனிய வள கூட்டுத்தாபனம் குறிப்பிட்டுள்ளது.

எனவே, அதுவரை வாகனங்களுடன் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்பாக வரிசையில் காத்திருக்க வேண்டாம் என மக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள முறைமைக்கு அமைய, வாகனங்களை வைத் திருப்போர், fuel pass. gov.lk என்ற இணைத்தளத்துக்கு பிரவேசித்து தேசிய எரிபொருள் அட்டைக்காக தங்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர். (நி)

# புலம்பெயர் அமைப்புகள் மீதான தடையை மீளாய்வு செய்யுங்கள்

## அமைச்சர் டக்ளஸ் கோரிக்கை



(கொழும்பு)

தடைசெய்யப்பட்டுள்ள தமிழ் புலம் பெயர் அமைப்புக்கள் மற்றும் முஸ்லிம் மக்கள் சார்பான அமைப்புக்கள் தொடர்பில் மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை விடுத்துள்ளார்.

பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது அவர் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இலங்கையின் சட்ட நியமங்களுக்கு உட்பட்டு சமூக நலத் திட்டங்களை மேற்கொள்ள விருப்பம் கொண்டுள்ள அமைப்புக்கள் தடை செய்யப்பட்டிருப்பின் அவற்றின் தடைகளை நீக்குவதன் ஊடாக நாட்டின் அபிவிருத்தி மற்றும் சமூக மேம்பாட்டுத் திட்டங்களை விரைவுபடுத்த முடியும் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைமதி சொக்கர் மாஸ்டர்ஸ்

## பிறீமியர் லீக் கால்பந்தாட்ட தொடரின்

## 9 ஆம் நாள் போட்டி முடிவு





நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கலைமதி சொக்கர் மாஸ்டர்ஸ் பிறீமியர் லீக் கால்பந்தாட்ட தொடரின் நேற்று முன்தினம் நடைபெற்ற ஒன்பதாம் நாள்

முதலாவது போட்டியில் SK Raiders அணிக்கும் மாஸ்டர்ஸ் அணிக்கும் இடையில் நடைபெற்றது.

மேற்படி போட்டியில் SK Raiders அணியினர் இரு கோல்களைப் பெற்றுக்கொண்டு வெற்றி பெற்றதனால் சுற்றுப் போட்டியின் அரை இறுதிப் போட்டிக்குள் நுழைந்துள்ளது.

போட்டியின் ஆட்ட நாயகனாக SK Raiders அணியின் கோற்காப்பாளர் பாலா தெரிவு செய்யப்பட்டார்.

தொடர்ந்து நடை பெறவிருந்த இரண்டாவது போட்டி வல்வை ப்ரண்ட்ஸ் அணிக்கும் குச்சம் கிங்ஸ் அணிக்கும் இடையிலிருந்தது.

ஆனால் குச்சம் கிங்ஸ் அணியினர் உரிய நேரத்திற்கு மைதானத்திற்குச் சமூகமளிக்காமையால் வல்வை ப்ரண்ட்ஸ் அணியினருக்கு வெற்றி வழங்கப்பட்டது.

இவ் வெற்றியுடன் வல்வை ப்ரண்ட்ஸ் அணியினர் சுற்றுப்போட்டியின் அரை இறுதிப் போட்டிக்குள் நுழைந்துள்ளனர். (6)

## தீவக மென்பந்தாட்ட போட்டியில் அல்லைப்பிட்டி சென். பிலிப்ஸ் சம்பியனானது

நயினாதீவு சனசமூக நிலையமும் நயினாதீவு மத்திய விளையாட்டு கழகமும் இணைந்து சின்னத்துரை ஜெகநாதன் குடும்பத்தினரின் நிதி அனுசரணையுடன் நடத்திய தீவக ரீதியான மென்பந்தாட்டத் தொடர் - 2022 சுற்றுப் போட்டியில் ஊர்காவற்றுறை இளைஞர் விளையாட்டுக் கழகத்தினை 55 ஓட்டங்களால் வீழ்த்தி சம்பியன் கிண்ணத்தை வென்றது அல்லைப்பிட்டி சென். பிலிப்ஸ் விளையாட்டுக்கழகம்.

நயினை மத்தி விளையாட்டு கழகத்தினால் நடத்தப்பட்ட மென்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நயினை மத்தி விளையாட்டு கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இறுதிப்போட்டியில் ஊர்காவற்றுறை இளைஞர் அணியும் அல்லைப்பிட்டி சென். பிலிப்ஸ் அணியும் மோதின.

குறித்த போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற ஊர்காவற்றுறை இளைஞர் அணி களத்தடுப்பை தெரிவு செய்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய அல்லைப்பிட்டி சென். பிலிப்ஸ் அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 96 ஓட்டங்களை குவித்தது.

துடுப்பாட்டத்தில் அல்லைப்பிட்டி சென். பிலிப்ஸ் அணி வீரர் சாள்ஸ் 58 (15 பந்துகளில்) ஓட்டங்களை அடித்து அரைச்சதம் கடந்தார்.

97 அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய ஊர்காவற்றுறை இளைஞர் அணி 6.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 41 ஓட்டங்களை பெற்றது. இதன்மூலம் 55 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஊர்காவற்றுறை இளைஞர் அணியை வீழ்த்தி அல்லைப்பிட்டி சென். பிலிப்ஸ் அணி சம்பியனானது. (6-33)




முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 04 . 11 . 1946

இறைவன் மடியில் 30 . 07 . 2021

அமரர்
ஏரம்பு நடராசா

அப்பா!
நீங்கள் கடவுள் எமக்கு தந்த பரிசு
அன்பான பேச்சு
அழகான புன்னகை
நேர்ப்பாங்கான சிந்தனை
இன்சொல் பரிமாற்றம்
இவை உங்கள் அடையாளங்கள்
உங்கள் பிரதிபலிப்பாய்
எப்போதும் எங்களை வழிநடத்துங்கள்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-4625)

இல. 188, உதயநகர் கிழக்கு,
கிளிநொச்சி.
077 455 2854
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்



கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியர் திரு. வே. மதியழகன்
அவர்களின் அன்புத் தாயார்
அமரர் வேலாயுதம்
அமுதுப்பிள்ளை



அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்
யா / கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

(12185)



பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனமொன்றுக்கு
பின்வரும் உத்தியோகத்தர்கள் தேவை.

- பாதுகாப்பு உத்தியோகத்தர் (ஆண்கள்)
- பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர் (பெண்கள்)

சிங்களத்தில் சரளமாக பேசக் கூடியவர்களுக்கு முன்னுரிமை

யாழ். நகரத்திலிருந்து 6 கிலோமீற்றர் தூரத்திற்குள் இருப்பவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

076 097 3121


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரசியல் ஸ்திரமின்மையால் பேச்சுவார்த்தைகள் பாதிப்பு

## மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

(கொழும்பு)

2022 இல் இலங்கையின் பொருளாதாரம் ஆறு வீதத்தினால் வீழ்ச்சியடையும் என மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

எனினும் அரசியல் ஸ்திரமின்மை சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகளை பாதித்துள்ளதால் பொருளாதார வீழ்ச்சி ஆறு வீதத்திற்கும் அதிகமாகயிருக்கலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

முக்கிய கட்டமைப்பு மாற்றங்கள் குறித்து சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கு நாட்டிற்கு ஸ்திரமான அரசியல் நிர்வாகம் அவசியம் என குறிப்பிட்டுள்ள மத்திய வங்கி ஆளுநர் அத்தியாவசிய இறக்குமதிகளான மருந்துகள் எரிபொருட்கள் போன்றவற்றை பெறுவதற்காக ஏனைய நாடுகளில் இருந்தும் சர்வதேச அமைப் புகளிடமிருந்தும் நிதி உதவியை பெறுவ தற்கும் ஸ்திரமான அரசியல் நிர்வாகம் அவசியம் என குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மாதம் கிடைக்கும் என எதிர் பார்க்கப்பட்ட 500 மில்லியன் டொலர் நீடிப்பு கிடைக்காதது எரிபொருள் நெருக்கடியை தீவிரப்படுத்தியுள்ளது.

அதேபோன்று இந்தியாவின் ரிசேர்வ் வங்கியுடன் எதிர்பார்க்கப்பட்ட ஒரு மில்லியன் டொலர் நாணய இடமாற்றத்திலும் முன்னேற்றம் ஏற்படவில்லை.

அதேபோன்று தனது 1.5 பில்லியன் டொலர் நாணய இடமாற்ற விடயத்தில் சீனா தனது நிபந்தனைகளை தளர்த்தவில்லை என மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்துள்ளார்.



ஒரு வருட காலத்திற்கு முன்னதாகவே இலங்கை சர்வதேச நாணய நிதியத்தை நாடியிருந்தால் கையில் நான்கு பில்லியன் டொலர்கள் இருந்த வேளை கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தால் அது இலங்கை இன்றும் அத்தியாவசிய பொருட்களை தடையின்றி இறக்குமதி செய்யக்கூடிய நிலையை ஏற்படுத்தியிருக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# நிராகரிக்கப்பட்ட தலைவர்களிடம் நாட்டை கையளிப்பது நல்லதல்ல

## ஆயர்கள் பேரவை கோரிக்கை

(கொழும்பு)

அரசியல் வேறுபாடுகள் மற்றும் நிகழ்ச்சி நிரல்களை புறந்தள்ளி, இடைக்கால ஜனாதிபதி மற்றும் பிரதமரை நியமிக்க பொது உடன்பாடு ஒன்றிக்கு வருமாறு அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களையும் இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது.

நியமிக்கப்படவுள்ள ஜனாதிபதி மற்றும் பிரதமர் தொடர்பில் அனைத்து அரசியல் தலைவர்களும் இது வரையில் எந்தவொரு பொது இணக்கப்பாட்டுக்கும் வரவில்லை என அந்த பேரவை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலவும் நெருக்கடியான சூழ்நிலையில் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு குறிப்பிட்ட காலத்திற்கு ஒன்றிணைந்த இடைக்கால அரசாங்கத்தை நிறுவுவது காலத்தின் தேவையாகும்.

நிராகரிக்கப்பட்ட தலைவர்களிடம் மேலும் நாட்டின் ஆட்சியை கையளிப்பது சிறந்த விடயமல்ல.

அனைவரினதும் நம்பிக்கையையும் வெற்றிக் கொள்ள கூடிய இடைக்கால ஜனாதிபதி மற்றும் பிரதமரை நியமிக்க உடன்பாடு ஒன்றை ஏற்படுத்துமாறு குறித்த பேரவை வலியுறுத்தியுள்ளது.

அவ்வாறு இல்லாவிடில், நிலைமை மேலும் மோசமாகும் என்பதுடன், பாராளுமன்ற உறுப்பினர்கள், பொது மக்களின் நம்பிக்கையை இழக்க நேரிடும் என இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது. (நி)

# சஜித்தை சந்தித்த ஆர்ப்பாட்டக்காரர்கள்

(கொழும்பு)

காலிமுகத்திடல் போராட்டத்தின் பிரதிநிதிகள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று திங்கட் கிழமை சந்தித்தனர்.

கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் ரணில் விக்கிரமசிங்க பதவி விலக வேண்டும் என்பதே காலிமுகத்திடல் போராட்டக்காரர்களின் முக்கிய கோரிக்கையாக இருப்பதாக பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசிப்பதற்காகவே நேற்று எதிர்க்கட்சித் தலைவரைச் சந்தித்ததாகவும் போராட்டக்காரர்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.



காலிமுகத்திடல் போராட்டத்தின் பிரதிநிதிகள் முன்வைக்கும் 'செயற்றிட்டத்தை' எதிர்காலத்தில் எந்த அரசாங்கமும் கடைப்பிடிக்க வேண்டும் என அவர்கள் எதிர்க்கட்சி தலைவருக்கு வலியுறுத்தியதாக தெரிவித்தனர். (நி)

# இந்தியாவில் இருந்து மேலும் உரம்

(கொழும்பு)

அடுத்த இரண்டு வாரங்களில் இந்தியாவில் இருந்து மேலும் 21,000 மெற்றிக் தொன் உரம் நாட்டிற்கு வரும் என விவசாயத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்திய கடன் திட்டத்தின் கீழ் இந்த இருப்பு கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக விவசாயத் துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்திய கடனின் கீழ் கொள்முதல் செய்யப்பட்ட 65,000 மெற்றிக் தொன் உரத்தில் இருந்து மொத்தம் 44,000 மெற்றிக் தொன் உரம் கடந்த வாரம் நாட்டிற்கு வந்துள்ளது.

உரங்களை விநியோகிப்பதற்கு தேவையான எரிபொருளை பெற்றுக் கொள்வதற்கு பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு நிதி வழங்குமாறும் அமைச்சர் அதிகாரிகளுக்கு பணித்துள்ளார்.

அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில் உர விநியோகம் மேற்கொள்ளப்படுவதாக விவசாயத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. (நி)

# இராசிபலன்

19.07.2022 உத்திரட்டாதி முன்னிரவு 6.34 மணிவரை அமிர்த சித்தம், ஆடிச்செவ்வாய்.
ஆடி 03, செவ்வாய்க்கிழமை சுபநேரம் 10.31-12.01 மணிவரை சந்திராஷ்டமம் - ஆயிலியம் ,மகம்
சஷ்டி பிற்பகல் 2.07 மணிவரை இராகுகாலம் 3.01-4.31 மணிவரை

வளவன்

**மேஷம்** தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், வீட்டுத்தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கடகம்** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், உடல் நலன் சீராகும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆன்மிகச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**துலாம்** செய் தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், பொது வாழ்வில் மதிப்பும், மரியாதையும் உயரும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மகரம்** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், வழிபாடு சிறப்புக்களைத் தரும், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், போசன நன்மையுண்டு.

**இடபம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பிரபலமானவர்களின் அறிமுகம் கிடைக்கும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**சிம்மம்** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், புதிய முயற்சிகளை தள்ளிப் போடுவது நல்லது, ரோக பயமுண்டு, நடப்பதெல்லம் நன்மைகேயென நினைக்க வேண்டிய நாள்.

**விருச்சிகம்** பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, எதிர்கால நன்மை கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**கும்பம்** எதிர்பார்ப்புக்கள் எளிதில் ஈடேறும் நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, விரதங்களில் நம்பிக்கை கூடும்.

**மிதுனம்** உறவினர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, அரச வழியில் அனுகூலமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், திறமைகள் வெளிப்படும் நாள்.

**கன்னி** குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு** தொழில் வளர்ச்சிக்கு அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனை கிடைக்கும், உறவினர்களிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், சுபவிரயங்கள் கூடும் நாள்.

**மீனம்** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், நிதானத்தோடு செயற்பட வேண்டிய நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழாலை புவனேஸ்வரி அம்பாள் மஹோற்சவம்

(குப்பிழான்)

ஏழாலை புங்கடி புவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல்11 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ளது.

தொடர்ந்தும் பத்துத் தினங்கள் காலை, மாலை உற்சவங்களாக இடம்பெறவுள்ள இவ்வாலய மஹோற்சவத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை இரவு 7 மணிக்குச் சப்பறத் திருவிழாவும், 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தேர்த் திருவிழாவும், ஆடிப் பூர தினமான அடுத்த மாதம் முதலாம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும், அன்றையதினம் இரவு 7 மணிக்கு கொடியிறக்க உற்சவமும் நடைபெறும். (நி-6-18)

# முகமூடிக் கொள்ளையர்கள் கைது

(அராலி)

இளவாலை பொலிஸ் பிரிவில் வீடு புகுந்து கொள்ளையில் ஈடுபட்ட முகமூடி கொள்ளை சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பண்டத்தரிப்பு பற்றிமா தேவாலயத்திற்கு அருகில் உள்ள வீடொன்றினுள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நான்கு முகமூடி கொள்ளையர்கள் உட்புகுந்து, வீட்டாரை கத்தி முனையில் மிரட்டி அவர்களிடம் இருந்து 20 பவுண் தங்க நகைகளை கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில், விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் வீட்டார் கொடுத்த முகமூடி கொள்ளையர்களின் அங்க அடையாளங்கள் குறித்த தகவலின் அடிப்படையில் 20, 21 வயதான இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் எனவும். மேலதிக விசாரணைகளை அவர்களிடம் முன்னெடுத்து வருவதாகவும் இளவாலை பொலிஸார் தெரிவித்தனர். (நி-6-104)




பூமணி அம்மா அறக்கட்டளையினரால் யாழ்.கொட்டடியில் வசிக்கும் மாற்றுத்திறனாளியான இரண்டு சிறுநீரகமும் பாதிக்கப்பட்ட இளைஞர் ஒருவருக்கு அண்மையில் பூமணி அம்மா அறக்கட்டளையின் யாழ்.அலுவலகத்தில் வைத்துச் சக்கர நாற்காலி ஒன்று மேற்படி அறக்கட்டளையினால் நேரடியாகக் கையளிக்கப்பட்டது. (படம்:- ரவிசாந்)

# தெணியானின் நினைவுப் பகிர்வு நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது

(குப்பிழான்)

ஜீவநதி ஏற்பாட்டில் கடந்த சனிக்கிழமை வடமராட்சி கொற்றாவத்தையில் இடம்பெறவிருந்த நாடறிந்த எழுத்தாளர் சாகித்திய ரத்னா தெணியானின் நினைவுப் பகிர்வு நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, குறித்த நிகழ்வு எப்போது இடம்பெறும் என்பது தொடர்பான அறிவித்தல் பின்னர் வெளியிடப்படும் எனவும் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (நி-6-18)

# நுணாவில் ஐ.ஓ.சி.நிலையத்தில் பொதுமக்களுக்கு எரிபொருள் விநியோகம்



(சாவகச்சேரி)

சாவகச்சேரி -நுணாவில் லங்கா ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று திங்கட்கிழமை பொதுமக்களுக்கு பெற்றோல் விநியோகிக்கப்பட்டது. தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/288 தொடக்கம்ஜே/294 வரையான 7கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த பொது மக்களுக்கே இவ்வாறு காலை 9 மணி தொடக்கம் எரிபொருள் விநியோகிக்கப்பட்டது.

இதன்போது கிராம உத்தியோகத்தினரால் வழங்கப்பட்ட எரிபொருள் அட்டை இல்லாதவர்களுக்கு எரிபொருள் விநியோகிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்களின் கண்காணிப்புடன் விநியோகம் சுமுகமான முறையில் இடம்பெறது. (நி-6-30)



நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய அறங்காவலர் சபை அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வில் ஆலய அறங்காவலர் சபையினரால் இலங்கை முதல் உதவிச் சங்க இந்துசமயத் தொண்டர் சபையினர் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (படம்- ரவிசாந்)

# புளியங்குளத்தில் கரடி தாக்குதலுக்கு இலக்காகி ஒருவர் படுகாயம்

(நெளுக்குளம்)

வவுனியா - புளியங்குளம் காட்டு பகுதியில் கரடியின் தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் இளைஞன் ஒருவன் வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் பிற்பகல் தேன் எடுப்பதற்காக எட்டுப் பேர் கொண்ட குழு புளியங்குளம் கச்சக்கொடி பகுதியில் உள்ள காட்டுப்பகுதிக்கு சென்ற போது கரடியின் தாக்குதலுக்கு இலக்காகி குறித்த இளைஞன் படுகாயமடைந்துள்ளார்.

இதனையடுத்து குறித்த இளைஞரை அப்பகுதியில் இருந்து ஏனையவர்களால் மீட்டு புளியங்குளம் மருத்துவமனைக்கு கொண்டு சென்றிருந்தனர். இந்நிலையில் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா மருத்துவமனையில்அனுமதிக்கப்பட்டார். (நி-6-299)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 280 | 200 | 240 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 240 | 240 | 260 |
| பச்சைமிளகாய் | 500 | 400 | 500 | 550 |
| தக்காளி | 250 | 240 | 300 | 260 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 300 | 300 | 240 |
| கோவா | 250 | 350 | 300 | 400 |
| கரட் | 200 | 360 | 400 | 400 |
| பூசணி | 240 | 250 | 240 | 240 |
| புடோல் | 160 | 140 | 200 | 240 |
| வாழைக்காய் | 100 | 100 | 120 | 80 |
| சின்ன வெங்காயம் | 280 | 320 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 230 | 240 | 240 | 260 |
| பாகற்காய் | 300 | 300 | 400 | 500 |
| வெண்டக்காய் | 160 | 140 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 240 | 280 |
| பயற்றங்காய் | 250 | 250 | 300 | 350 |
| லீக்ஸ் | 200 | 260 | 240 | 320 |
| பீற்றூட் | 280 | 300 | 300 | 300 |
| கறிமிளகாய் | 500 | 500 | 400 | 450 |
| முருங்கைக்காய் | 400 | 500 | 800 | 400 |
| போஞ்சி | 350 | 450 | 600 | 500 |
| கத்தரிதம்புள்ள | 250 | 150 | -- | 280 |
| கீரை - 1 பிடி | 120 | 100 | 80 | 100 |
| தேசிக்காய் | 200 | 250 | 300 | 320 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 70 | 50 | 50-70 |
| இராசவள்ளி | 160 | 250 | 240 | 250 |
| வெங்காயப்பூ | 300 | 300 | 300 | 350 |
| முள்ளங்கி | 120 | 100 | 200 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 50 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 40 |
| ஈரப்பலா | 60 | 150 | 80 | 150 |

# ரணிலை வீட்டுக்கு அனுப்ப வேண்டும்

## மாக்சிச லெனினிச கட்சி

(யாழ்ப்பாணம்)

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் கடந்த நாற்பத்தி நான்கு வருடங்களில் நாடும் மக்களும் சந்தித்த மோசமான அரசியல், பொருளாதார, சமூக நெருக்கடிகளையும் அழிவுகளையும் விடப் பாரிய விலைகளை மக்கள் கொடுக்க வேண்டி ஏற்படும் என புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் தெரிவித்துள்ளார்.

ஆதலால் ரணிலை வீட்டிற்கு அனுப்பி வைப்பதே பேரெழுச்சியில் கலந்து கொண்ட இலட்சோப இலட்சம் மக்களின் கோரிக்கையாகும். என நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கடந்த சில மாதங்களாக நாட்டில் உருவாகி உச்சமடைந்து வந்த மோசமான அரசியல், பொருளாதார, சமூக நெருக்கடிகள் தனியே ராஜபக்ஷ குடும்ப ஆட்சியால் மட்டும் வந்த ஒன்றல்ல.

சுதந்திரம் கிடைத்[illegible] கூறப்பட்ட காலத்தில்[illegible] நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிக் காலத்திலும் முன்னெடுக்கப்பட்ட தவறான அரசியல் பொருளாதாரக் கொள்கைத் திட்டங்களின் எதிர் விளைவுகளையே இன்று வரை நாட்டு மக்கள் பெரிய நெருக்கடிகளாக அனுபவித்து வருகின்றனர்.

எமது நாட்டின் வளங்களும் மக்களின் வாழ்வும் உள்நாட்டு தரகுமுதலாளிகளாலும் அந்நிய முதலீடுகளாலும் சூறையாடப்படும் என்பதில் மறு பேச்சிற்கே இடமில்லை. இதனைத் தடுத்து நிறுத்துவதற்கு முதலிலே ரணில் பதவிக்கு வருவதை தடுத்து வீட்டிற்கு அனுப்ப வேண்டும்.

இதனை மக்கள் செய்யாது விடின் நாடும் அனைத்து மக்களும் விரைவாகவே பெருநாசங்களைச் சந்திக்க வேண்டிய அபாயச் சூழலே உருவா[illegible] என அவ் அறிக்கையில் தெரிவித்துள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் மீண்டும் கொரோனா பரவும் அபாயம்

## சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**உலகம் முழுவதும் பரவிவரும் கொரோனா வைரஸின் புதிய மாறுபாடு இலங்கைக்குள் நுழையும் அபாயம் இருப்பதாக பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

கொரோனாவின் புதிய மாறுபாடு நாட்டிற்குள் நுழைந்ததா என்பதை கண்டறிய வேண்டும் என அதன் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார்.நாட்டில் கடந்த 24 மணித்தியாலங்களில் மேலும் 34 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து, நாட்டில் பதிவான மொத்த கொரோனா பாதிப்புக்களின் எண்ணிக்கை 6 இலட்சத்து 64 ஆயிரத்து 414 ஆக பதிவாகியுள்ளது. (நி)

# பேருந்து கட்டணங்களை குறைக்கத் தயார்

## தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம்

(கொழும்பு)

எரிபொருள் விலை திரு த்தத்தின் மூலம் அந்த நன் மையை மக்களுக்கு பெற்றுக் கொடுக்க முடியும் என தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. .

தற்போதைய நிலவரத்தை கருத்தில் கொண்டு பேருந்து கட்டணங்கள் குறைக்கப்படுமா என்பது குறித்து வினவியதற்கு, இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன,

எரிபொருள் விலையை குறைப்பது மிகவும் நல்ல விடயம். உண்மையில் இந்த நேரத்தில் டீசல் போதியளவில் இருந்திருந்தால் அந்த பலனை மக்களுக்கு வழங்க முடிந்தி ருக்கும். அரசு விலையை குறைத்து எரிபொருள் விநி யோகத்தை துரிதப்படுத்தினால் நாம் அந்த பலனை மக்களுக்கு வழங்க முடியும் என பதில ளித்தார். (நி-6)

# புதிய ஜனாதிபதிக்கான வேட்பு மனுத் தாக்கல்

(கொழும்பு)

புதிய ஜனாதிபதியை நியமிப்பதற்கான வேட்புமனுக்களை ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கை இன்று செவ் வாய்க் கிழமை முன்னெடுக்கப்படவுள்ளது. .

சபாநாயகர் தலைமையில் இடம் பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது .

இதன்படி, நாளை புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு நடத்துவதற்கும் தீர்மா னிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பாராளுமன்ற உறுப்பினர்களான அநுர குமார திஸாநாயக்க மற்றும் டலஸ் அழகப்பெரும ஆகியோர் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடவுள்ளதாக ஏற்கனவே உறுதிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ரயில் - கார் விபத்து

## சிகிச்சை பலனின்றி கர்ப்பிணி பெண்ணும் குழந்தையும் உயிரிழப்பு

(கொழும்பு)

காலி - மாகல்ல அனுலாதேவி மகளிர் கல்லூரிக்கு அருகில் உள்ள ரயில் கடவையில் கார் ஒன்று ரயிலுடன் மோதிய விபத்தில் கர்ப்பிணிப் பெண்ணும் அவரது மகளும் உயிரிழந்துள்ளனர்.

காலி - மாகல்ல அனுலாதேவி பெண்கள் கல்லூரிக்கு அருகில் நேற்று திங்கட்கிழமை காலை காரொன்று ரயிலில் மோதி விபத்துக்குள்ளானதில் 6 பேர் காயமடைந்துள்ளனர்.இந்த விபத்தில் காரில் பயணித்த கர்ப்பிணி பெண் மற்றும் இரண்டு சிறு பிள்ளைகள் உட்பட 6 பேர் காயமடைந்து கராப்பிட்டிய மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

திருமண நிகழ்வொன்றில் கலந்து கொண்டு வீடு திரும்பியபோதே கார் இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: ரோகிணி 2
கி.பா: 13 சூரி 9 செவ் 4 இல்
உயரம்:5'8"
தகைமை/ தொழில்: சொந்த தொழில் / Dip. in Network, Business Management.
எதிர்பார்ப்பு: பட்டதாரி ஆசிரியை விரும்பத்தக்கது
தொ.இ: B/3402

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: சித்திரை 2
கி.பா: 39 சூரி.செவ் 4
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண் விவாகரத்தானவர்
தொ.இ: B/10620

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: பூரம் 3
கி.பா: சூரி 11 செவ் 7
உயரம்:5'6'
தகைமை/ தொழில்: BSc,(QS)MSc(லண்டன்)
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: B/9971

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம் : உததிரட்டாதி
கி.பா: சூரி . செவ் 10 இல்
தகைமை/தொழில்: BSc NGO
எதிர்பார்ப்பு : பட்டதாரி
தொ.இ: B/9972

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி 4
கி.பா:17 சூரி 8 செவ் 6 இல்
உயரம்:160 cm
தகைமை/தொழில்: BSc உதவி பிரதேச செயலர்
எதிர்பார்ப்பு: உயர்பதவி
தொ.இ: G/10754

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: மகம் 1
கி.பா: 52 ½ சூரி 7 செவ் 6
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: கணக்காளர் (அவுஸ்திரேலியா)
எதிர்பார்ப்பு: பட்டதாரி வெளிநாடு( லண்டன் அவுஸ்திரேலியா.சிங்கப்பூர்.நியூஸ்லாந்து
தொ.இ: G/10758

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 1
கி.பா: 47 ¾ சூரி 4 செவ் 3 இல்
தகைமை/தொழில்: A/L (தனியார் தொழில்)
எதிர்பார்ப்பு: நிரந்தர தொழில்
தொ.இ:G/10766

பிறப்பு:1980 இந்து
நட்சத்திரம்: அனுசம் 3
கி.பா :13 சூரி 11 செவ் 1 இல்
தகைமை/தொழில்:நூலக உதவியாளர் விவாகரத்தானவர்
எதிர்பார்ப்பு: நிரந்தர தொழில்
தொ.இ:G/10778

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.





# எனது 31 ஆண்டு ஆன்மீகப் போராட்டப் பாதையிலே

## ஐயா கண்ட தரிசனங்களில் சில...

கடந்த (30.04.2022) வலம்புரிப் பத்திரிகையில் வெளிவந்த விளம்பரத்திலே....

சுழிபுரம்-பறாளாய் சர்வவல்லமை பொருந்திய ஈசுவர விநாயகரது தும்பிக்கையிலே நம்பிக்கையோடு நம் நாட்டுப் பிரச்சினை சம்பந்தமாக ஓர் மனு சமர்ப்பித்ததை (08.11.1991) யாவரும் அறிந்ததே. அம் மனுவின் முக்கிய கோரிக்கை கொழும்பு அரசியல் சூறாவளி ஏற்பட்டு பூகம்பமாக வெடிக்க வேண்டும் என்பதாகும். 30 வருடங்கள் கடந்த பின்னரே ஈசுவர விநாயகர் எனது கோரிக்கையை சென்ற வைகாசி மாதம் 9 ஆம் திகதி தொடக்கம் ஆடி மாதம் 9 ஆம் திகதி வரை நாட்டில் ஏற்படுத்திய அரசியல் வன்முறைச் சம்பவங்கள் மூலமாக வெளிப்படுத்தி அடியேனுக்கு நிறைவேற்றித் தந்துள்ளார் என்பதனை அனைத்து மக்களுக்கும் அறியத்தருவதுடன் இது ஒரு ஆன்மீகப் போராட்டத்தின் பெரும் சாதனை என்பதனையும் குறிப்பிட விரும்புகின்றேன்.

*'அரசன் அன்றறுப்பான்*
*தெய்வம் நின்றறுக்கும்'*

என்பதை உணர்வோமாக. என்ன ஆச்சரியம்! ஈசுவர விநாயகரின் தெய்வீகத்தை எப்படிக் கூறுவேன்?இத்துடன் 17 ஆண்டுகளுக்கு முன்னர் (21.06.2005) (இதழ் 12) ஈசுவர விநாயகர் காட்டியருளிய நிறைவேறாத தரிசனங்களையும் மீண்டும் ஞாபகம் மூட்டினேன்.

1.நாட்டில் இதுவரை நடைபெறாத ஒரு பெரும் அரசியல் சண்டையைக் கண்டேன்.
2.பின் கலவரமாக மாறக் கண்டேன்.
3. கொழும்பு அரசியல் வாதிகளின் பாதுகாப்பு கேள்விக்குறியாவதைக் கண்டேன்.

ஐயா, வலம்புரியில் வெளிவந்த விளம்பரத்தில் குறிப்பிட்ட சம்பவங்களுள் மேற்குறிப்பிட்ட 3 சம்பவங்களையும் ஈசுவர விநாயகர் உடனடியாகவே நடைமுறையில் மக்கள் உணரக் கூடியதாக காட்டியருளினார். இன்னும் நிறைவேறாத மிகுதி தரிசனங்களையும் விரைவாக நடத்தப் போகின்றார்.ஈசுவர விநாயகரோ அரசியல்வாதிகளை விடப்போவதில்லை அடுத்து ஏற்கனவே எழுதியவாறு 24.03.2004 நாடு பறிபோகுமாப் போல ஒரு நிலையை ஏற்படுத்த திருவுளங் கொண்டுள்ளார்.

ஐயா, குறிப்பிட்ட மிகுதிச் சம்பவங்களான சந்திரிகா போன்ற முன்னாள் மூத்த அரசியல் வாதிகள் நாட்டை காப்பாற்றுங்கள் காப்பாற்றுங்கள் என்று குரல்கள் ஓல மிடுவதைக் கண்டேன். இந்திய அறிவாளிக் குழுவைக் கண்டேன். குழுவில் ஆணும் பெண்ணும் இருப்பதைக் கண்டேன். குழுவினர் மத்திய அரசுக்கு இராணுவத்தை அனுப்புமாறு சிபாரிசு செய்யக்கண்டேன். இந்திய இராணுவ விமானங்கள் தொடர் தொடராக கொழும்பை நோக்கி வருவதைக்கண்டேன். தெற்கில் இந்திய வருகைக்கு எதிர்ப்பியக்கம் உருவாகக் கண்டேன். வந்த இந்திய இராணுவம் திரும்பிப் போக மறுக்கக் கண்டேன். இன்னும் பல கண்டேன் யாவும் நடைமுறையில் உணருங்கள். போற்றி போற்றி ஈசுவர விநாயகர் திருப்பாதம் போற்றி!!

குறிப்பு-(இந்திய இராணுவம் வருவதற்கு முன்னதாக ஐ.நா. படை போன்ற ஓர் படை அணி வருவதையும் கண்டுள்ளேன் என்பதனையும் குறிப்பிட விரும்புகின்றேன்.)

'நினைப்பதெல்லாம் நடந்து விட்டால் தெய்வம் எதற்கு? மக்கள் நினைப்பதொன்று தெய்வம் நினைப்பதொன்று.'

(12183)

சோழியூரான் பிறைசூடிக்குரு
(ஆன்மீகவாதியும் சந்ததிப்பூசகரும் பரிபாலகரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகநூல் தரிசனம் 94

## மனிதன் என்பவன் தெய்வமாகலாம்



நெஞ்சை நெகிழச் செய்யும் ஒரு நிகழ்வு...நீங்களும் யாருக்காவது கடவுளாகலாம்...

ஒரு பதினைந்து இராணுவ வீரர்களும் அக்குழுவின் மேஜரும் இமாலயாவில் 3 மாத காலம் பணி புரியச் சென்று கொண்டு இருந்தார்கள்.. மிகவும் குளிர்ந்த சீதோஷ்ண நிலையும் , இடை இடையே பனி மழையும் அவர்கள் மலை ஏறுவதை மிகவும் கடினப்படுத்தியது..

இந்த நேரத்தில், யாராவது ஒரு கப் தேநீர் கொடுத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். சக இராணுவ வீரர் சொல்ல மேஜரின் மனமும் ஆசைப்பட்டது.

ஒரு மணி நேரம் நடக்க, வழியில் ஒரு பாழடைந்த ஒரு சிறிய கடை போல் தோற்றம் கொண்ட தேநீர் கடையையே கண்டார்கள்.

ஆனால் அது பூட்டால் பூட்டப்பட்டிருந்தது...

"அதிர்ஷ்டம் இல்லை, தேநீர் இல்லை" ஆனாலும் நாம் சில நிமிடம் ஓய்வெடுக்கலாம்...நாமும் மூன்று மணி நேரம் நடந்து வந்திருக்கோம்...என்றார் மேஜர்.

அதில் ஒரு இராணுவ வீரர் சொன்னார்...சேர், இது ஒரு தேநீர்க்கடை தான்...உள்ளே தேநீர் தயாரிக்க எல்லாம் இருக்கக்கூடும். நாம் பூட்டை உடைக்கலாமே...என்றார்.

இது ஒரு தர்மசங்கட நிலை அவருக்கு... தன்னுடைய தளர்ந்த வீரர்களுக்கு தேநீர் கொடுக்க பூட்டை உடைப்பதா? அல்லது இப்படிப்பட்ட ஒரு தகாத காரியத்தை செய்யாமல் இருப்பதா? என்று குழம்பினார்... சிறிது நேரம் கழித்து,வீரர்களிடம் பூட்டை உடைக்கச் சொன்னார்...அவர்களின் அதிர்ஷ்டம், உள்ளே தேநீர் தயாரிக்க எல்லாம் இருக்க, பிஸ்கெட் பக்கெற்றும் இருந்தது.

நாம் இந்த கடையின் பூட்டை உடைத்து தேநீர், பிஸ்கெட் உண்டோம்... நாம் ஒரு மோசமான திருடர்கள் அல்ல... இது ஒரு சூழல்... நாம் இந்த தேசத்தை காக்கும் தேசத்தாயின் பிள்ளைகள்.

இப்படிப்பட்ட நினைவு அவரை வந்து இடிக்க, அவர், ஆயிரம் ரூபாவை தன் பேர்ஸில் இருந்து எடுத்து, அந்த கவுண்டரில் இருந்த சீனி டப்பாவின் கீழே வைத்து விட்டு, கதவை மூடி விட்டு, தன் குற்ற உணர்ச்சி துறந்து புறப்பட்டார்...

அடுத்த மூன்று மாத காலத்தில் அவரின் தலைமையில் வீரர்கள் தீவிர கிளர்ச்சிக்குள்ளாகக்கூடிய அந்த இடத்தில் பணியாற்றி, யாருக்கும் உயிர் சேதம் வராமல் இருக்க, அடுத்த குழு வந்து அவர்களை விடுவித்தது...

அதே வழியில் அவர்கள் திரும்ப, அதே தேநீர் கடை, ஆனால் இப்பொழுது அது திறந்திருந்தது. அதன் முதலாளியும் இருந்தார்... ஒரு வயதான அந்த கடை முதலாளி, திடீரென்று தனக்கு கிடைத்த அந்த பதினாறு விருந்தாளிகளையும் வரவேற்று அமரச் சொன்னார்.

எல்லோரும் தேநீர் பிஸ்கெட் உண்டு களித்தனர். அந்த வயதானவரிடம், இப்படி ஒரு ஆபத்தான இடத்தில் தேநீர் விற்பது பற்றியும் அவரின் வாழ்க்கை சூழல் பற்றியும் பேசினர். அவரிடம் பல அனுபவ கதைகள் இருந்தன... மிகவும் நிறைந்த நெஞ்சுடன் கடவுள் பக்தியும் இருந்தது...

தாத்தா... கடவுள் இருக்கிறார் என்பது உண்மை எனில், அவர் எதுக்கு உன்னை இப்படி இங்கே இவ்வளவு வறுமையுடன் வைத்திருக்க வேண்டும் என இராணுவ வீரர் கேட்க, அப்படி சொல்லாதீர்கள் மகனே...கடவுள் நிச்சயம் இருக்கிறார்...அதற்கு என்னிடம் சான்றே இருக்கு..

மூன்று மாதத்திற்கு முன்பு, சில தீவிரவாதிகளால், ஒரு விடயம் தேவைப்பட்டதால் எனது மகன் மிகவும் அதிக தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டான்...

நான் எனது கடையை மூடிவிட்டு எனது மகனை மருத்துவமனை கூட்டிச் சென்றேன்... அவர்கள் எழுதிக்கொடுத்த மருந்தை வாங்க என்னிடம் பணம் இல்லை...

தீவிரவாதிகளுக்கு பயந்து யாரும் எனக்கு கடன் கொடுக்கவும் வரவில்லை..

என் நம்பிக்கை ஈற்று போய்விட்டது...

கடவுளிடம் கதறி அழுதேன்... நான் அழுது ஆற்றிக் கொண்டு என் கடையை வந்தடைந்த பொழுது... என் கடையின் பூட்டு உடைக்கப்பட்டிருந்தது. நான் முழுதும் போய் விட்டது என்று நினைத்து கலங்கி, பயந்து உடைக்கப்பட்ட பூட்டை விலக்கி உள்ளே சென்று பார்த்தேன்... அங்கே சீனி டப்பாவின் கீழே ஆயிரம் ரூபாய் இருந்தது.. உங்களுக்கு என்னால் அந்த ஆயிரம் ரூபாவின் மதிப்பை வார்த்தைகளால் சொல்ல இயலாது...கடவுள் இருக்கிறார்...இதை விட என்ன சொல்ல... என்று முடித்தார்.

அவர் கண்களில் அதற்கான நம்பிக்கை மிளிர்ந்தது...

அந்த பதினைந்து ஜோடிக்கண்களும் அந்த மேஜரின் ஒரு ஜோடிக்கண்களை இப்பொழுது துடிப்புடன் பார்த்தன...அந்த ஒரு ஜோடிக்கண், எதையும் சொல்லாதீர்கள் என்பதை ஒரு அதிகார ஆணையாக பிறப்பித்ததை அவர்கள் உணர்ந்தார்கள்..அந்த மேஜர் எழுந்து, எல்லாவற்றிற்கும் பணம் கொடுத்தார்...

அந்த முதியவரை தழுவிக்கொண்டு, ஆம் தாத்தா, எனக்கும் தெரியும்..கடவுள் இருக்கிறார்... தாத்தா... உங்கள் தேநீர் மிக அபாரம்... இதை அவர் சொல்லும் பொழுது, அவர் கண்களின் ஓரம் படிந்த ஈரத்தை மீதி பதினைந்து ஜோடிக்கண்களும் பார்க்க தவறவில்லை... இதில் இருக்கும் உண்மை என்ன என்றால்... நீங்களும் யாருக்காவது கடவுளாகலாம் என்பதே. இது ஒரு இராணுவ வீரரால் சொல்லப்பட்ட உண்மைக் கதை.



Bosco Thusha
3 mutual friends

# பாகிஸ்தான் இடைத்தேர்தல் இம்ரான்கான் கட்சி அபார வெற்றி



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் சட்டசபை இடைத்தேர்தல் சமீபத்தில் நடைபெற்றது. காலியாக உள்ள 20 சட்டசபை தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடந்தது.

காலை 8 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு மாலை 5 மணிக்கு நிறைவடைந்து, வாக்குகள் எண்ணப்பட்டு நேற்று முன்தினம் முடிவுகள் வெளியானது.

இந்நிலையில், சட்டசபை இடைத்தேர்தலில் முன்னாள் பிரதமர் இம்ரான்கான் தலைமையிலான தெஹ்ரிக் இ இன்சாப் கட்சி 16 இடங்களில் அபார வெற்றி பெற்றுள்ளது. சட்டசபை இடைத்தேர்தலில் வெற்றி பெற்ற தெஹ்ரிக் இ இன்சாப் கட்சிக்கு ஆளும் கட்சி தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டது. (நி)

### அமெரிக்காவில் அதிகரிக்கும் சூட்டு சம்பவங்கள்

# வணிக வளாகத்தில் துப்பாக்கிச் சூடு 4 பேர் ஸ்தலத்தில் உயிரிழப்பு


(வோஷிங்டன்)

அமெரிக்காவில் வணிக வளாகத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 3 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்ட மர்மநபரும் சுட்டு வீழ்த்தப்பட்டார்.

அமெரிக்காவில் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் தொடர் கதையாகி வருகின்றன. இந்நிலையில் அங்கு மேலும் ஒரு துப்பாக்கிச் சூட்டு சம்பவம் நடந்திருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்காவின் இண்டியானா மாகாணத்தில் கிரீன்வுட் பகுதியில் உள்ள வணிக வளாகத்தில் உணவு விடுதிகள் அமைந்த பகுதியில் துப்பாக்கியுடன் வந்த அடையாளம் தெரியாத மர்ம நபர் ஒருவர் திடீரென துப்பாக்கி சூடு நடத்தி உள்ளார். இந்த சம்பவத்தில் 3 பேர் உயிரிழந்து உள்ளனர். 2 பேர் காயமடைந்து உள்ளனர். இதனைத் தொடர்ந்து, சத்தம் கேட்டு அந்த பகுதிக்கு வந்த மற்றொரு நபர், சம்பவம் பற்றி அறிந்தவுடன் தன்னிடம் இருந்த துப்பாக்கியை எடுத்து மர்ம நபரை நோக்கி சுட்டார். இதில், மர்ம நபர் உயிரிழந்து உள்ளார். இதனால் மொத்த உயிரிழப்பு 4 ஆக உள்ளது.

அமெரிக்காவில் துப்பாக்கி கலாசாரத்தை கட்டுப்படுத்தும் வகையில் அண்மையில் புதியதொரு சட்டத்தை அந்நாடு முன்மொழிந்தது. இதற்கு அமெரிக்க மேல் சபையான செனெட் சபை ஒப்புதல் அளித்துள்ளது. இப்படிப்பட்ட சூழலில் தற்போது மேலும் ஒரு துப்பாக்கிச் சூட்டு சம்பவம் அங்கு நடந்திருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (நி)

# உலகின் இரண்டாவது உப்பு நீர் ஏரி மாயம்



(டெஹ்ரான்)

1990 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் உலகின் இரண்டாவது மிகப் பெரிய உப்பு நீர் ஏரியாக விளங்கிய ஈரானின் 'ஊர்மிளா' உப்பு நீர் ஏரி தற்போது நீரற்றுக் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலைக்கு ஈரானிய அரசியல்வாதிகளே பிரதான காரணம் எனக் கூறி மேற்படி ஊர்மிளா உப்பு நீர் ஏரி பகுதியை சுற்றியுள்ள மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் போராட்டக்காரர்களை உடனடியாக கைது செய்யும்படி ஈரானிய பொலிஸாருக்கு அரசாங்கம் உத்தரவிட்டிருப்பதாகவும், பலர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# பிரான்ஸில் பாரிய காட்டுத்தீ

## சுமார் 16 ஆயிரம் மக்கள் வெளியேற்றம்

(பாரிஸ்)

**காட்டுத்தீயின் அச்சுறுத்தலுக்கு உள்ளான 16,000 இற்கும் மேற்பட்ட மக்களை பிரான்ஸ் வெளியேற்றியுள்ளது.**



பிரபலமான சுற்றுலாப் பகுதியான பிரான்ஸின் ஜிரோண்டேவில் உள்ள அதிகாரிகள், முகாம்களில் இருந்து காவலர்களை வெளியேற்றியுள்ளனர்.

சுற்றுலாப் பயணிகள் முன்னதாகவே வெளியேறினர்.

தற்போது, டெஸ்டெ-டி-புச் மற்றும் லாண்டிராஸ் பகுதிகளில் தீ பரவியுள்ளது.



தெற்கு ஸ்பெயினில், 3,200 இற்கும் மேற்பட்ட மக்கள் மிஜாஸ் மலைகளில் தீயில் இருந்து வெளியேறினர்.

போர்த்துகலில் தீ தற்போதைக்கு கட்டுப்படுத்தப் பட்டுள்ளது.

சமீபத்திய நாட்களில் போர்த்துகல் மற்றும் ஸ்பெயினில் வெப்பம் காரணமாக 1,000 இற்கும் மேற்பட்ட இறப்புகள் ஏற்பட்டுள்ளன.

ஸ்பெயின், குரோஷியா மற்றும் கிரேக்கம் ஆகிய நாடுகளிலும் தீ பரவியதால், இதுவரை பல்லாயிரக்கணக்கான மக்கள் வெளியேறியுள்ளனர். - (நி)

# இந்திய ஜனாதிபதி தேர்தல் பிரதமர் மோடி வாக்களித்தார்

(டில்லி)

இந்தியாவில் புதிய ஜனாதிபதியை தெரிவு செய்ய நேற்று நாடு முழுவதும் காலை 10 மணி முதல் வாக்குப்பதிவு நடைபெற்று வருகிறது.


டில்லி பாராளுமன்ற வளாகத்தில் ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்குப் பதிவை பிரதமர் மோடி உள்ளிட்ட தலைவர்கள் செலுத்தினர்.

ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் பதவிக்காலம் வருகிற 24 ஆம் திகதியுடன் நிறைவடைகிறது. இதையடுத்து புதிய ஜனாதிப்தியை தேர்ந்தெடுப்பதற்காக நடத்தப்படும் தேர்தலுக்கான வாக்குப் பதிவு நேற்று திங்கட் கிழமை நடந்தது.

அதன்படி தேசிய ஜனநாயக கூட்டணி (பா.ஜ.க. கூட்டணி) வேட்பாளராக திரேளபதி முர்முவும் எதிர்க்கட்சி சார்பில் யஷ்வந்த் சின்காவும் வேட்பாளர்களாக களத்தில் உள்ளனர்.

நாடு முழுவதும் உள்ள எம்.பி, எம்.எல்.ஏ.க்கள் வாக்குசீட்டு முறையில் புதிய ஜனாதிபதியை தெரிவு செய்ய உள்ளனர்.

இந்நிலையில் டில்லி பாராளுமன்ற வளாகத்தில் ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்கு பதிவினை பிரதமர் மோடி செலுத்தினார்.




அவரைத் தொடர்ந்து மத்திய அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களும் தங்களது வாக்கினை பதிவு செய்தனர். (நி)

ப்படுகின்றது.

மேற்படி ஊர்மிளா நீர் நிலையானது கடந்த 20-30 வருடங்களுக்கு முன்னர் மிகுந்த வருமான மீட்டும் சுற்றுலாத்துறையாக காணப்பட்டதாகவும் உலகின் இரண்டாவது உப்பு நீர் தேக்கமாகவும் காணப்பட்டு வந்தது. இந்நிலையில் அரசாங்கம் மேற்படி பகுதியில் மேற்கொண்ட நவீன அபிவிருத்திகள் காரணமாகவும் இரசாயன கருவிகளின் பாவனை காரணமாகவும் மேற்படி ஊர்மிளா உப்பு நீர்த் தேக்கம் அழிவடைந்துள்ளதுடன் அதன் அழகு கெட்டுப் போயுள்ளதாகவும், தற்பொழுது சுற்றுலாத் துறை பூச்சிய நிலையில் இருப்பதால் அதனை சுற்றியுள்ள மக்களின் வாழ்வாதாரம் வெகுவாக பாதிக்கப்பட்டு இருப்பதாகவும் போராட்டங்களில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்கு ஈரானிய அரசாங்கம் பதில் கூற வேண்டும் எனவும் அவர்கள் கூறி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# 100 அடி பாலத்தில் இருந்து ஆற்றுக்குள் கவிழ்ந்த பேருந்து

## 13 பேர் உயிரிழப்பு

(டில்லி)

இந்தியாவின் மத்திய பிரதேசத்தில் பேருந்து கட்டுப்பாட்டை இழந்து 100 அடி உயர பாலத்தில் இருந்து ஆற்றுக்குள் கவிழ்ந்து விழ்ந்தது.

இதில் பேருந்துக்குள் சிக்கி பயணிகள் வெளியே வர முடியாமல் தவித்தனர். இதைபார்த்த அருகில் இருந்த கிராம மக்கள் அங்கு ஓடிவந்து அவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.

மேலும் உள்ளூர் பொலிஸார் மற்றும் தீயணைப்பு படை வீரர்களும் விரைந்து வந்து மீட்பு பணியினை மேற்கொண்டனர்.

ஆனாலும் ஆற்றில் மூழ்கி 13 பேர் பரிதாபமாக இறந்தனர். இவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டு உள்ளன.

மற்றவர்கள் உடல்களை தேடும் பணி நடந்து வருகிறது. 15 பேர் உடனடியாக உயிருடன் மீட்கப்பட்டதாக மத்திய பிரதேச அமைச்சர் நரோட்டம் மிஸ்ரா தெரிவித்தார். (நி)

# அமெரிக்காவின் நடுவானில் விமான விபத்து

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் நோர்த் லாவோஸ் பிராந்தியத்தில் இரண்டு விமானங்கள் நேருக்கு நேர் நடுவானில் மோதிக் கொண்ட சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இந்த மோதல் சம்பவத்தில் 4 பேர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி இரண்டு விமானங்களும் தனியாருக்கு சொந்தமான சிறிய விமானங்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

விபத்திற்கான காரணங்களை அறியும் விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் அமெரிக்க செய்திகள் தெரிவிக்கின்றன. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தரப்பு நிதானத்துடன் செயற்பட வேண்டிய நேரமிது

## சமத்துவக்கட்சி அறிக்கை



(கிளிநொச்சி)

**இடைக்கால ஜனாதிபதி பதவிக்கான தேர்தல் போட்டியில் தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த்தரப்புக் கட்சிகள் போட்டியில் ஈடுபடும் வேட்பாளர்களிடம் சிறுபான்மைத் தேசிய இனங்களின் அபிலாஷைகள், பிரச்சினைகளுக்கான தீர்வுக்கான உத்தரவாதத்தை கோர வேண்டும் என சமத்துவக்கட்சி தெரிவித்துள்ளது.**

இது தொடர்ப்பில் அக் கட்சியின் பொதுச் செயலாளர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் மேற் கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, நாட்டின் அரசியல் பொருளாதார நிலவரம் மிக மோசமான அளவுக்கு நெருக்கடிக்குள்ளாகி, மக்களுடைய நாளாந்த வாழ்க்கையே பெரும் சவாலாகியிருக்கிறது.

இதனால் மக்கள் போராட்டம் வலுப்பெற்று நிலையான அரசியல், பொருளாதார மாற்றத்தைக் கோரி நிற்கிறது. இந்த அரசியல் சூழலில் நடைபெறவுள்ள இடைக்கால ஜனாதிபதி பதவிக்கான தேர்தல் போட்டியில் தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள், குறிப்பாகத் தமிழ்த்தரப்புக் கட்சிகள் மிகப் பொறுப்போடும் நிதானத்தோடும் செயற்பட வேண்டும்.

போட்டியில் ஈடுபடும் வேட்பாளர்களிடம் சிறுபான்மைத் தேசிய இனங்களின் அபிலாஷைகள், பிரச்சினைகளுக்கான தீர்வை முன்வைக்கும் வகையிலான அழுத்தத்தை அவை கோர வேண்டும்.

வரலாற்றுச் சந்தர்ப்பங்களை தொடர்ந்தும் இழந்து வரும் நிலை மேலும் தொடரக்கூடாது. தமிழ் மக்கள் எப்போதும் தேசிய நெருக்கடி, இன நெருக்கடி என இரட்டைநெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர் என்பதை உணர்ந்து அனைத்துத்தரப்பும் செயற் பட வேண்டும் என்பதைச் சுட்டிக் காட் டுகிறோம் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

## பளை வண்ணாங்கேணி பகுதியில் மர்மப்பொருள் வெடிப்பு



(தருமபுரம்)

பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வண்ணாங்கேணி பகுதியில் வெடிப்பு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரிய வருகையில், நேற்று முன்தினம் மாலை வண்ணாங்கேணி பகுதியில் காணியை துப்புரவு செய்து குப்பைக்கு தீ வைத்த போதே குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக பளை பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டதையடுத்து குறித்த இடத்திற்கு வருகை தந்த இராணுவம் மற்றும் பொலிஸார் வெடிப்பு சம்பவம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-6-316)

## வவுனியா எரிபொருள் நிலையத்தில் முறுகல் நிலை

(நெளுக்குளம்)

வவுனியா - மன்னார் வீதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அரச ஊழியர்களிற்கும் பொலிஸாருக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலை காரணமாக நகரசபை உறுப்பினர் உட்பட மேலும் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வவுனியா-மன்னார் வீதி நெளுக்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளினை பெற்றுக்கொள்வதற்காக கடந்த நான்கு நாட்களுக்கும் மேலாக இரவு-பகல் பாராது அரச உத்தியோகத்தர்கள் ஒரு வரிசையிலும் பொதுமக்கள் ஒரு வரிசையிலும் காத்திருந்தனர்.

இந்நிலையில் ஐம்பதிற்கும் மேற்பட்ட பொலிஸார் தமக்கான புதிய வரிசையினை உருவாக்கி தங்களிற்கான எரிபொருளினை பெற்ற பின்னரே அரச ஊழியர்கள் பெற முடியும் என தெரிவித்தமையால் அரச ஊழியர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.


இதன்போது பொலிஸாருடன் தர்க்கத்தில் ஈடுபட்ட நகரசபை உறுப்பினர், அரச உத்தியோகத்தர் ஒருவரையும் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

இதனால் அப்பகுதியில் பெரும் குழப்ப நிலை ஏற்பட்டதுடன் இரு பொலிஸாருக்கு, இரு அரச ஊழியர்கள் என்ற ரீதியில் எரிபொருளினை வழங்க பொலிஸார் உடன்பட்டதன் பின்னரே குறித்த குழப்ப நிலை முடிவுக்கு வந்திருந்தது. (நி-6-299)

## மன்னாரில் ஊசிக்கணவாய் சீசன் ஆரம்பம்

(மன்னார்)

அரபு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் டியூப் கணவாய் மீன்களின் சீசன் தொடங்கியதால் மன்னார் வளைகுடா கடல் பிராந்தியத்தில் மீன் பிடிக்க சென்ற பாம்பன் விசைப்படகு மீனவர்களுக்கு அதிக அளவில் கிடைப்பதால் மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.



சைக்கிள் டியூப் போன்று இருப்பதால் இதை டியூப் கணவாய் என்று மீனவர்கள் அழைக்கின்றனர்.

இது கணவாய் வகையில் ஒரு வகைப்படும். ஒரு அடி நீளம் வரையில் இருக்கும். இதற்கு ஊசிக்கணவாய் என்ற மற்றொரு பெயரும் உண்டு.

இந்த கணவாய் மீன்கள் மணிக்கு 70 கிலோ மீற்றர் வேகத்தில் நீந்திச் செல்லும்.

தற்போது ஒரு கிலோ ரூ.200 முதல் ரூபாய் 250 வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது.

பாம்பன் மீன்பிடி துறைமுகத்தில் வியாபாரிகள் மூலம் கொச்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டு அங்கிருந்து அரபு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. (நி-6-285)

## தொற்றா நோய்களுக்கான இலவச மருத்துவ முகாம்



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்ட செயலக உத்தியோகத்தர்களுக்கான தொற்றா நோய்களுக்கான இலவச மருத்துவ முகாம் நேற்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெற்றது.

இதன்போது தொற்றா நோய்களான இரத்த சீனி மட்டம், இரத்த கொலஸ்ரோல் மட்டம், உடற்திணிவு சுட்டி, வயிற்றுப் பருமன், இரத்த அழுத்தம் (பிரசர்) ஆகிய மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, மருத்துவ சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன.

மாவட்ட செயலக பண்டார வன்னியன் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற குறித்த மருத்துவ முகாமில் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு பரிசோதனைகளை மேற்கொண்டனர். (நி-6-315)



தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் ஆடிப்பிறப்பு விழாவினை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை உரும்பிராய் கிழக்கு பாரதிதாசன் சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்ற இவ்விழாவில் ஆடிக் கூழும் கொழுக்கட்டையும் பரிமாறப்பட்டதோடு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்றவர்களுக்குத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தினால் பரிசுப் பொருட்களும் வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி மாத இராசி பலன்கள்

## 17.07.2022 - 16.08.2022

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

## தொழிலில் கூடுதல் இலாபம் கிடைக்கும்!



**அடுத்தவர் நலனில் அதிக அக்கறை எடுத்துக் கொள்ளும் மிதுன இராசி வாசகர்களே!**

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன், தன ஸ்தானத்தில் சகாய ஸ்தானாதிபதி சூரியனோடு இணைந்து சஞ்சரிப்பதால் பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். புது முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

**சிம்ம - புதன் சஞ்சாரம்**

ஆடி 13 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு புதன் செல்கிறார். இந்த நேரம் வெற்றிகள் வீடு தேடி வரும். திட்டமிட்ட காரியங்களை திட்டமிட்டபடியே செய்து முடிப்பீர்கள். உடன்பிறப்புகளும், உடனிருப்பவர்களும் உறுதுணையாக இருப்பர். தொழிலில் கூடுதல் இலாபம் கிடைக்கும். அதிகார வர்க்கத்தினரின் ஆதரவோடு ஒரு நல்ல காரியத்தை செய்து முடிப்பீர்கள். பொதுவாழ்வில் பொறுப்புகள் வந்துசேரும்.

**கடக - சுக்கிரன் சஞ்சாரம்**

ஆடி 22 ஆம் திகதி, கடக இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு பஞ்சம- விரயாதிபதியான சுக்கிரன் தன ஸ்தானத்திற்கு வரும் போது, விரயத்திற்கேற்ற வரவு வரும். வீடு, இடம் வாங்கும் யோகம் உண்டு. உடல்நலம் சீராகும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. வெளிநாடு செல்லும் முயற்சி அனுகூலமாகும். உத்தியோகத்தில் கேட்ட இடத்திற்கு மாறுதல் உண்டு. புத்திர ஸ்தானாதிபதியாவும் சுக்கிரன் விளங்குவதால் பிள்ளைகளுக்கு வேலை கிடைக்கும்.

**குருவின் வக்கிர இயக்கம்**

ஆடி 23 ஆம் திகதி மீன இராசியில் குரு வக்கிரம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. கேந்திராதிபத்ய தோஷம் பெற்றவரான குரு பகவான் வக்கிரம் பெறுவது ஓரளவு நன்மை தான். என்றாலும் எதிர்பாராத சில பின் விளைவுகளை சந்திக்க நேரிடும். தொழிலில் மாற்றங்களைச் செய்ய முன் வருவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள், சுய தொழில் தொடங்குவது பற்றி சிந்திப்பர். 7 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் குரு பகவான் விளங்குவதால் வாழ்க்கைத் துணை வழியே சில பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். வரன்கள் கை நழுவிச் செல்லலாம். குடும்ப ஒற்றுமை




குறையலாம். அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வதால் அமைதி காண இயலும்.

**ரிஷப - செவ்வாய் சஞ்சாரம்**

ஆடி 25 ஆம் திகதி, ரிஷப இராசிக்கு செவ்வாய் செல்கிறார் உங்கள் இராசிக்கு 6, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய்.

அவர் விரய ஸ்தானத்திற்கு வரும் இந்த நேரம் விரயங்கள் கூடும். வீடு மாற்றங்கள், இட மாற்றங்கள், உத்தியோக மாற்றங்கள் நிகழலாம். சொத்துக்களை விற்பனை செய்ய முன்வருவீர்கள்.

அடகு வைத்து மீட்ட பொருளை மீண்டும் அடகு வைக்க நேரிடும். "நினைத்தது ஒன்று, நடந்தது ஒன்றுமாக இருக்கிறதே" என்று கவலைப்படுவீர்கள். இம்மாதம் சனிக்கிழமை தோறும் அனுமனை வழிபாடு செய்யுங்கள்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் செலவு அதிகரிக்கும். குருவின் பார்வை தன ஸ்தானத்தில் பதிவதால் தேவைக்கேற்ற பணம் வந்து சேரும். குடும்பப் பிரச்சினைகளை வளராமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

கணவன் - மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். பிள்ளைகளின் மேற்படிப்பு மற்றும் வேலை வாய்ப்பு கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும். பணிபுரியும் பெண்களுக்கு திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்காது.

## வீடு மாற்றம், உத்தியோக மாற்றம் ஏற்படலாம்!



**எதிர்காலத்தைப் பற்றியே எப்பொழுதும் சிந்தித்துக் கொண்டிருக்கும் கடக இராசி வாசகர்களே!**

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசியை குரு பார்ப்பதால் பிரச்சினைகள் படிப்படியாக தீரும். கண்டகச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் ஆரோக்கியத்தில் அக்கறை.தேவை.

**சிம்ம - புதன் சஞ்சாரம்**

ஆடி 13 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் தன ஸ்தானத்திற்கு வரும் போது விரயத்திற்கேற்ற வருமானம் வந்து கொண்டேயிருக்கும். வீடு மாற்றம், உத்தியோக மாற்றம் ஏற்படலாம். பஞ்சாயத்துக்கள் சாதகமாகும். பொதுவாழ்வில் புதிய பொறுப்புகள் கிடைக்கலாம். நல்ல நிறுவனங்களில் இருந்து அதிக சம்பளம் தருவதாக சொல்லி அழைப்புகள் வரலாம்.

**கடக - சுக்கிரன் சஞ்சாரம்**

ஆடி 22 ஆம் திகதி, கடக இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் உங்கள் இராசியிலேயே பிரவேசிக்கும் பொழுது பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். கொடுக்கல் - வாங்கல்கள் ஒழுங்காகும். வீடு, இடம் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். புதிய வாகனங்கள் வாங்கும் முயற்சி கைகூடும். தடைப்பட்ட பத்திரப் பதிவு துரிதமாக நடைபெறும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு.

**குருவின் வக்கிர இயக்கம்**

ஆடி 23 ஆம் திகதி, மீன இராசியில் குரு வக்கிரம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு பகவான். 6 இற்கு அதிபதியான குரு வக்கிரம் பெறுவது நன்மை தான் என்றாலும், அவர் பாக்கிய ஸ்தானத்திற்கும் அதிபதியாக இருப்பதால் ஒருசில நல்ல வாய்ப்புகளை இழக்க நேரிடும். உறவினர் பகை அதிகரிக்கும். மிகுந்த கவனத்துடன் செயற்பட வேண்டிய நேரம் இது. 6 ஆம் இடத்திற்கும் அதிபதியாக இருக்கிறார், குரு பகவான்.




மறைவிடத்திற்கு அதிபதியான குரு வக்கிரம் பெறுவது நன்மை தான். உத்தியோகத்தில் எதிர்பாராத மாற்றங்கள் இனிமை தரும். கடனை செலுத்தி நிம்மதி காண்பீர்கள். தொழில் மாற்ற சிந்தனைகள் மேலோங்கும்.

**ரிஷப - செவ்வாய் சஞ்சாரம்**

ஆடி 25 ஆம் திகதி, ரிஷப இராசிக்கு செவ்வாய் செல்கிறார். இக்காலம் ஒரு இனிய காலமாக அமையும்.

உங்கள் இராசிக்கு யோகம் செய்யும் கிரகமான செவ்வாய் இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, பொருளாதார விருத்தி, உற்சாகத்துடன் செயற்படும் தன்மை, தொழில் முன்னேற்றம்', பயணங்களால் பலன், இளைய சகோதரத்துடன் இணக்கம், கடல் வணிக த்தால் மேன்மை தோன்றும். தட்டுப்பாடுகளும் முட்டுக் கட்டைகளும் அகலும். இம்மாதம் திங்கட்கிழமை தோறும் கற்பக விநாயகரை வணங்குங்கள்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் மீன குருவின் பார்வையால் சிறப்பான வாழ்க்கை அமையும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். வருமானம் திருப்தி தரும். கணவன் - மனைவிக்குள் பாசம், அதிகரிக்கும்.

பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள். அவர்களின் எதிர்கால நலன் கருதி நீங்கள் எடுத்த முயற்சிகள் கைகூடும். சகப் பணியாளர்களால் தொல்லை ஏற்பட்டாலும், மேலிடத்தில் உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## மணத்திற்கு மனம்



(நேற்றைய தொடர்ச்சி)

அப்போதும் மாய நாதன் சிரித்தவாறே "பேஷ் மந்திரமாலையால் நான் இவளை வசீகரித்து விட்டேன் என்பதா உன் குற்றச்சாட்டு?" என்று கூறியவாறே சுந்தரவர்மன் கழுத்தில் அணிந்திருந்த மாலையைப் பார்த்தான்.

அதைக் கேட்ட சுந்தரவர்மன் திடுக்கிட்டுத் திகைத்தான். சற்று யோசித்து விட்டு அவன் தான் அணிந்திருந்த மாலையை கழற்றித் தரையின் மீது ஓங்கி அடித்தான். அதிலிருந்த சிவப்புக் கல் சுக்கல் சுக்கலாகிப் போயிற்று. அதுவரை சுந்தரவர்மனின் பக்கம் நின்றிருந்த பூர்ணிமா அவனைப் பார்த்து நடுங்கியபடி "யார் நீங்கள்? நான் எப் படி இவர் பக்கம் வந்து நின்றேன் எனக் கூறி சட் டென ஓடிப் போய் மாய நாதனின் பக்கம் போய் நின்றான். மறு நிமிடமே சுந்தரவர்மன் அக் குகையிலிருந்து வெளியே வந்து தன் குதிரை மீதேறித் தலைநகருக்கு சென்று விட்டான். வேதாளம் இக் கதையைக் கூறி "மன்னனே! சுந்தரவர்மன் மிக அழகி என்று எண்ணி பூர்ணி மாவை மணக்கத் தானே மந்திர வாதியின் குகை க்குச் சென்றான்! இதற் காகப் புலியைக் கொன்று மந்திர மாலையையும் எடுத்து அணிந்து கொண்டானே. அவன் இந்த நிலையில் பூர்ணிமாவைத் தடை எதுவும் இல்லாமல் மணந்து கொண்டிருக்கலாமே. ஆனால் அவ்விதம் செய்யாமல் மந்திரமாலையை எடுத்துத் தரையில் அடித்து அதன் சிவப்புக் கல்லை உடைத்தானே? இதெல்லாம் ஏன்? என் சந்தேகங்களுக்கு நீ பதில் கூறா விட்டால் உன் தலை வெடி த்துச் சுக்கு நூறாகி விடும்" என்றது.

விக்கிரமனும் "மாய நாதனை எல்லோரும் கயவன் எனக் கூறிய போதிலும் அவன் பூர்ணிமாவின் விடயத் தில் உயரிய பண்போடு நடந்து கொண்டான். ஒரு பெண்ணின் மனதை மந்திர சக்தியால் வெல்லக் கூடாது என்றும் அவளாக விரும்பித் தன்னை மணக்க வேண்டும் என நினைத்தே மாய நாதன் தன் மந்திர மாலையைப் புலியின் கழுத்தில் அணிவித்து விட்டு குகைக்குள் சென்றான். ஆனால் சுந்தரவர்மன் அந்த மாலையை அணிந்து பூர்ணிமாவை வசீகரித்த போது அவனுக்கு சிரிப்பு வந்தது. அந்த சிரிப்பின் பொருள் சுந்தரவர்மனுக்கு விளங்கி விட்டது. அந்த மாலையை வேறு எவரும் துஷ்பிரயோகம் செய்யக் கூடாது என நினைத்தே அவன் அதன் கல்லை உடைத்தான். அவன் பூர்ணிமாவின் விருப்பம் என்ன எனத் தெரிந்து கொண்டு விட்டதால் அவளை வற்புறுத்த முடியாது எனத் தெரிந்து கொண்டான். எனவே அவளை மணக்கும் எண்ணத்தை விட்டு விட்டு சென்றான்" என்றான். விக்கிரமனின் சரியான இந்தப் பதிலால் அவனது மௌனம் கலையவே அவன் சுமந்து வந்த உடலோடு உயரக் கிளம்பிப் போய் மீண்டும் முருங்க மரத்தில் ஏறிக் கொண்டது.

(முற்றும்)

# சிலப்பதிகாரம்

## கோவலன் என் காவலன்




அப்படியானால் நீ போய் அவளிடம் பேச வேண்டியது தானே?

"சந்தர்ப்பம் அமைய வேண்டுமே?"

சந்தரப்பத்தை நாம் தான் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

அவளின் சகோதரர்களும், தந்தையும் மண்டபத்தில்தான் இருப்பார்கள்.

இருக்கட்டுமே. குத்தீட்டியை வயிற்றில் ஏற்றி வாய் வழியே வெளியே எடுப்பார்கள்.

இந்தப் பேரழகிக்காகச் செத்துப் போவதில் தவறில்லை.

"அப்போது நீ செத்துப் போ, நாங்கள் பார்க்கிறோம்" எல்லோரும் சிரித்தார்கள்.

அவன் நிஜமாகவே போய் அந்தப் பெண்ணிடம் பேசினான்.

என்ன பேசினான் என்பது தூரத்திலிருந்து கேட்கவில்லை.

ஆனால் சில விநாடிகளுக்குள்ளாகவே அந்தப் பெண் சிரிப்பும் வெட்கமுமாக அவனிடம் பேச ஆரம்பித்தாள். அதைப் பார்த்த [illegible] நண்பர்கள் பொ[illegible] யில் வெந்தார்கள்.

வெளியே...நடுத்தர வயதுப் பெண்கள் பூக்களையும் மாலைகளையும் [illegible] மெல்லிய குரலில் ஏதோ பாடியபடி இருந்தார்கள். சிலர் சந்தனம் உள்ளிட்ட வாசனைப் பொருட்களைத் தாம்பாளத்தில் எடுத்து வந்தார்கள். மேலும் சிலர் இனிப்புகளையும் எடுத்து வந்தார்கள். வேறு சிலர் பளீரென்ற சிரிப்புடன் கைவிளக்கு ஏந்தி வந்தார்கள். குழந்தைகள் புது உடை அணிந்து துள்ளிக் குதித்து விளையாடிக்கொண்டிருந்தார்கள். பெரியவர்கள் அசந்திருக்கும் சமயங்களில் தட்டுகளில் இருந்து பழங்களையும், தின்பண்டங்களையும் எடுத்துக் கொண்டு ஓடினார்கள்.

அது ஒரு பெரிய பணக்கார வீட்டுத் திருமணம் என்பது பார்த்தவுடன் தெரிந்தது.

மாசாத்துவான்... சோழமன்னனுக்கு மிக நெருக்கமான வெகு சிலரில் நியாயமான முறையில் வியாபாரம் செய்து ஏகப்பட்ட செல்வம் வைத்திருந்தார். வணிகத்தில் விற்பன்னர். எதில் கை வைத்தாலும் தங்கமாக அறுவடை செய்வார். சம்பாதிப்பது அத்தனையும் தனக்கும் தன் சந்ததிக்கும் மட்டுமே என்று பூட்டி வைக்கிற அற்பர் இல்லை.

வந்தது எத்தனை போனது எத்தனை என்று கணக்கின்றி ஏழைகளுக்கு வாரி வழங்கினார். புகார் நகரில் வறுமையை நினைத்து யாரும் பயப்படத் தேவையில்லாமல் எளிய மக்களின் நம்பிக்கைக் கோட்டையாக இருந்தார்.

பொதுவாக, மக்கள் பணக்காரர்களைத் தனி இனமாக ஒதுக்கி வைப்பார்கள். ஆனால் அவர்கள் மாசத்துவானை மட்டும் தங்கள் உறவாகவே நினைத்தார்கள்.

மாசத்துவான் என்கிற பெயர் சோழ நாட்டில் மட்டுமில்லை சேர நாட்டிலும் பாண்டிய நாட்டிலும்கூடப் பிரபலம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பையில் துவாரமிருந்தால் அதில் பணத்தை நிரப்பிப் பலனில்லை.
– ஜார்ஜ்எலியட்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இலங்கையர் இல்லாத இலங்கை படும் பாடு!

இலங்கையின் இன்றைய நிலைமைக்கு யாது காரணம் என்று கேட்டால் அதற்கான ப்தில் பலவாறாக இருக்கலாம்.

ஆனால் மூலகாரணம் ஒன்று இருந்தேயாகும். அந்த மூலகாரணம் எது எனில், இலங்கையர் இல்லாத இலங்கையாக இந்த நாடு இருப்பதுதான் இத்துணை அவலத்துக்கும் மூலகாரணம் எனலாம்.

ஆம், இலங்கையைப் பொறுத்தவரை இங்கு சிங்களவர்கள் இருக்கிறார்கள். தமிழர்கள் இருக்கிறார்கள். முஸ்லிம்கள் இருக்கிறார்கள். ஆனால் இலங்கையில் இலங்கையர்கள் இல்லை.

இது இந்த நாட்டுக்கு ஏற்பட்ட மிகப்பெரும் சாபக்கேடாகும்.

உண்மை, நாம் இலங்கையர் என்ற தேசப்பற்றை வளர்த்தெடுக்காமல், நாங்கள் பௌத்த சிங்களவர்கள் இந்த நாடு எமக்கே உரியது. இங்கு தமிழர்களும் முஸ்லிம்களும் வந்தேறு குடிகள். அவர்களுக்கு இந்த நாட்டில் ஆளும் உரிமையில்லை. அவர்கள் இரண்டாந்தரப் பிரஜைகள் என்றவாறு வரலாற்றைத் திரிவுபடுத்தி சிங்கள மாணவர்களிடம் அதை விதைத்துவிட, அந்த இன மத வக்கிரம் கிரந்தம் முற்றிப் பௌந்திரமாக்கியது போல ஆகிவிட்டது.

அதாவது நீண்டகாலமாக தமிழ் மக்களுக்கு – சிறுபான்மை இனத்துக்கு எதிரான செயற்பாட்டை ஆளுந்தரப்புச் செய்து வந்ததன் காரணமாக, அதனை ஆதரிப்பதும் அதற்காக எதுவும் செய்யலாம் என்ற அங்கீகாரங்களும் நாட்டை இன்று படுகுழிக்குள் வீழ்த்தியுள்ளது.

ஆம், பேரினவாதத் தீயை மூட்டி அதனூடாக அரசியல் இலாபம் தேடிய சிங்கள ஆட்சியாளர்கள் தங்களின் அரசியல் பிழைப்பிற்காக பேச்சிலும் எழுத்திலும் பேரினவாதத்தைப் பரப்பினர்.

இதனால் இலங்கை மக்கள் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் எனப் பிரிந்து போயினர்.

உண்மையில் அண்டை நாடான இந்தியாவில் பலமொழி பேசும் பல்லின மக்கள் வாழுகின்ற போதிலும் அவர்கள் இந்தியர்களாக வாழுகின்றனர்.

இதுவே அந்த நாட்டின் உயர்வுக்கும் கட்டுக்கோப்புக்கும் மூலகாரணமாகும்.

ஆனால் சிறிய நாடாகிய இலங்கையில் நாம் இலங்கையர் என்ற தேசப்பற்றை ஏற்படுத்த முடியாமல் போனதன் காரணமாக இன்று எங்கள் நாடு உலகமெல்லாம் இரந்து நிற்கிறது.

இதைக்கூறும்போதுதான் ஓ! சிங்கள மக்களே இன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை துரத்திய நீங்கள் 2009ஆம் ஆண்டு வன்னிப் பெருநிலப்பரப்பில் கொடும் போரை ராஜபக்ஷ தரப்பு நடத்தியபோது, வேண்டாம் தமிழின அழிப்பு என்று கூறி ஆட்சியாளர்களைத் துரத்தி இருந்தால், இன்று இலங்கை சமாதானம் நிறைந்த வளம் கொழிக்கும் நாடாகத் திகழ்ந்திருக்கும்.

என்ன செய்வது இன்வாத மாயை இந்த நாட்டு மக்களின் கண்களை மறைத்துவிட்டதன் விளைவுதான் இன்றைய அவலநிலை என்பதை இனியேனும் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

## பெற்றோல் மாதிரி பரிசோதனைக்காக தரை இறக்கும் பணி இன்று ஆரம்பம்

### எரிசக்தி அமைச்சர் காஞ்சன

(கொழும்பு)

நாட்டை வந்தடைந்துள்ள பெற்றோலின் மாதிரி தற்போது தரப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுவருவதாகவும், அவற்றை தரை இறக்கும் பணி இன்று ஆரம்பமாகும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

டுவிட்டர் பதிவொன்றின் ஊடாக அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும், சிலோன் பெற்றோலிய சேமிப்பு முனையத்தின் (CPSTL) பிராந்திய களஞ்சிய சாலைகளுக்கு இன்று தொடருந்து மற்றும் தாங்கி ஊர்திகள் மூலம் விநியோகம் தொடங்கப்படும் என்றார்.

இதேவேளை, இரண்டு சரக்கு கப்பல்களில் டீசல் இறக்கும் பணி கொழும்பு துறைமுகத்தில் நிறைவடைந்துள்ளதுடன், மற்றுமொரு சரக்கு கப்பலில் இருந்து எரிபொருள் இறக்கும் பணிகள் தற்போது துறைமுகத்தில் நடைபெற்று வருவதாகவும் அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

மேலும்,தேசிய இளைஞர் படை மற்றும் அதன் உறுப்பினர்களுடன்இளைஞர் விவகார அமைச்சும் தேசிய எரிபொருள் அட்டை பெறும் முயற்சிக்கு உதவ முன்வந்துள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பதிவினை மேற்கொள்ள பொதுமக்களுக்கு தேசிய இளைஞர் படையணி உதவும் என்றும், இந்த செயல்முறை கிராமப்புறங்களிலும் விஸ்தரிக்கப்படும் என்றும் அவர் கூறினார். (ம-7)

## ஜனாதிபதி வாக்கெடுப்பு முன்னணியும் விலகல்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்வின் வாக்கெடுப்பில் நாம் பங்குபற்ற மாட்டோம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில், சிங்களத் தலைவர்களுக்கு அக்கறை இல்லை. மக்களின் வாழ்க்கையை குலைப்பதற்கு ராஜபக்ஷாக்களுக்கு எந்தளவு பங்கு இருக்கின்றதோ, அதே அளவுக்கு ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பங்கு இருக்கிறது. ஆகவே இவர்களை நம்பி பலன் இல்லை. இந் நிலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வாக்கெடுப்பில் பங்குகொள்ளாது என்றார். (ம-7)

## கட்டுநாயக்கவில் ஆட்டோ சாரதி படுகொலை

கட்டுநாயக்க, மஹகம ஹினடியான பகுதியில் 38 வயதான முச்சக்கரவண்டி சாரதி ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் எரிபொருள் நிரப்பும் நிலையத்திற்குச் சென்று கொண்டிருந்தபோது கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மற்றுமொரு முச்சக்கர வண்டியில் வந்த குழுவொன்று வாள்களால் தாக்கி கொலையை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

தனிப்பட்ட தகராறு காரணமாக இந்த கொலை இடம்பெற்றுள்ளதாகவும் சந்தேகநபர்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியிலிருந்து முற்பகல் 11 மணி வரை யாழ் குடாநாடு முழுவதும் மின்சாரம் தடைப்படும்.

அத்துடன் நாளை 20 ஆம் திகதி புதன்கிழமை காலை 7.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை **யாழ். பிர தேசத்தில்** சீனா ரயில்வே அச்செழு, விக்கிரமாராட்சி பிறைவேற் லிமிடெட் புன்னாலைக்கட்டுவான், ரெலிகொம் சுன்னாகம், அச்செழு நீர்வேலி குறுக்கு வீதி, ஏழாலை, ஈவினை, கட்டுவன், கட்டுவன் புலம், கற்பகம் ஊரெழு, குப்பிழான், குரும்ப சிட்டி, மாசிவன் அச்செழு, மயிலங்காடு, என்.கே திருமண மண்டபம் ஊரெழுப் பிள்ளையார், புன்னாலைக் கட்டுவன், புன்னாலைக் கட்டுவன் வடக்கு, புன்னாலைக்கட்டுவன் தெற்கு,சூராவத்தை சுண்ணாகம், புகையிரத நிலைய வீதி மணியங்கடையடி, தோப்பு ஏழாலை, வாகையடி, சுண்ணாகம் மின் நிலையப் பிரதேசம் ,பொக்கணை,ஊரெழு அம்மன் கோவிலடி, கோப்பாய் மானிப்பாய் வீதி ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** உயிர்த்தரசங் குளம், எருக்கலம்பிட்டி நீர் வழங்கல் திட்டம்,புதிய சில்க் ரோடு அகுடிக் கம்பனி பிறவேற் (லிமிட்டட்) (கடலுணவு களஞ்சியம்), கொன்னையன் குடியிருப்பு, மாலு வாடிச்சந்தி, ஓலைத்தொடுவாய், சணிக்கிராமம், தாழ்வுப்பாடு, தாராபுரம், தாராபுரம் திட்டம், தோட்ட வெளி ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** மகாறம்பைக்குளம் ஆகிய இடத்திலும் மின்சாரம் தடைப்படும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### ஆன்மாவின் பிரதிபலிப்பு



❖ இடைவிடாமல் மனதை ஒடுக்கும் பயிற்சியின் ஆற்றலால் பழைய தீய செயல்கள் அழிகின்றன. இறுதியாக நல்ல செயல்களும் அழிந்து போகின்றன. நல்ல செயல்களும் தீய செயல்களும் ஒன்றையொன்று அடக்கி விடுகின்றன.


❖ பின்னர் ஆன்மா மட்டும் நன்மை மற்றும் தீமைகளால் கடடுப்படாததாய், எங்கும் நிறைந்ததாய், எல்லாம் வல்லதாய், எல்லாம் அறிந்ததாய் சுய ஒளியில் மிளிர்கிறது.

❖ அப்போதுதான் மனிதன் தனக்குப் பிறப்பு- இறப்பு எதுவும் இல்லை. விண்ணுலகோ மண்ணுலகோ எதுவும் வேண்டியதில்லை என்பதை அறிகிறான். தான் பிறந்ததும் இல்லை. இறக்கப் போவதும் இல்லை. எல்லாமே இயற்கையின் விளையாட்டு அது ஆன்மாவில் பிரதிபலித்தது என்பதை அறிகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
13
-
05
-
1951



மறைவு
16
-
07
-
2022

# செல்லர் சின்னராசா (ஆமண்ணை / ஜெயக்குட்டி)

நாச்சிமார் வீதி, நவாலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லர் சின்னராசா (ஆமண்ணை, ஜெயக்குட்டி) அவர்கள் 16.07.2022 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லர் - மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னு - நாகமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும் மல்லிகாதேவியின் (குஞ்சு) அன்புக் கணவரும் லீலாவதி (ராணி), காலஞ்சென்றவர்களான நடராசா, இராசமலர், சிவராசா (சுட்டி), சர்வானந்தராசா (சாந்தன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சுதர்சினி (சுபா - கனடா), உதயன்மாக்ஸ் (கஸ்ரோ - இலங்கை மின்சார சபை உத்தியோகத்தர் - வேலணை), நிசாந்தன்மாக்ஸ் (நிக்சன் - சுவிஸ்), திர்சிகாயினி (முன்னாள் ஆசிரியை - கிளி/பூநகரி நல்லூர் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஸ்ரீமதிமேகலா (மஞ்சு - சுவிஸ்), காலஞ்சென்ற கிரி மற்றும் ஜெய தாட்சாயினி (கால்நடை வைத்தியர் - உடுவில்), விந்தன்மாக்ஸ் (விந்தன் - லண்டன்), ராஜி, காலஞ்சென்ற ரஜனி, ரஜிதா, சசி, குபேரதன், சூரி, காலஞ்சென்ற பகிரதன், சசிகரன், கோபிகா, ரூபன் ஆகியோரின் சிறிய தந்தையும் புவனேஸ்வரி (கிளி), காலஞ்சென்ற தவமலர், திருநாவுக்கரசு (திலக் - சுவிஸ்), செல்வம் (சுவிஸ்), காலஞ்சென்ற சின்னத்தம்பி, பிலோமினா, தபேந்திரநாயகம் (ரவி), றஞ்சி, வசந்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜோண்சன் (சுவிஸ்), கலாநிதி பத்மதாஸ் (துறைத் தலைவர் - பௌதிகவியல்துறை, யாழ்.பல்கலைக்கழகம்), ஸ்ரீஸ்கந்தவேள் (கனடா), தேனுகா (ஆசிரியை - யா/கோண்டாவில் சி.சி.த.க பாடசாலை), துளசிவர்மன் (நகரதிட்டமிடலாளர், Managing Director - Canopus Pvt Ltd), லட்சனி (சுவிஸ்), அகிம்சனா (லண்டன்), தளிரினி (சுவிஸ்), பிரவின் (சுவிஸ்), பிறேன் (சுவிஸ்), சீத்தா, கெங்கா, அமுதா, தர்சினி, தனுசன், டினேசன், டினேசா ஆகியோரின் அன்பு மாமனாரும் ரம்யா, டக்சன், கனிஸ்ரன், கம்சிகா, லக்சா, பரத், நிசான் ஆகியோரின் பெரிய தந்தையும் மாருதன் (சுவிஸ்), ஜெருசன் (சுவிஸ்), தஸ்வின் (யா/இந்துக் கல்லூரி), ஹரிஸ்னி (யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), சருஸ்வின் (யா/இந்து ஆரம்ப பாடசாலை), பியுர்வின் (கனடா), கோசிக் (லண்டன்), கனிஸ்க் (லண்டன்), கஸ்மிரா (யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்), ஆதித்தி (BBC- மானிப்பாய்) ஆகியோரின் அன்புப் பேரனும் சின்னத்தம்பி, மாலினி (சுவிஸ்), காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, லிங்கா (சுவிஸ்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (20.07.2022) புதன்கிழமை காலை 8 மணிக்கு அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10 மணிக்கு நவாலி ஆரியம்பட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
தொ.பே:- 077 385 7261

(12187)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆட்டோ...

பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

100 ரூபாய் என்ற முதல் கிலோ மீற்றருக்கான கட்டணத்தை குறைக்காமல் இரண்டாவது கிலோ மீற்றருக்கான கட்டணத்தை 90 ரூபாயாக குறைக்க தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

பெற்றோல், டீசல் விலையை நேற்று முன்தினம் முதல் குறைத்து ஐ.ஓ.சி. நிறுவனமும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனமும் அறிவித்தல் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## எரிவாயு...

பாலான பிரதேசங்களில் இடம்பெறுகின்ற நிலையில், மாத இறுதியில் எரிவாயு விநியோகம் சீராகும் என லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த மாத இறுதியளவில் நாட்டில் அனைத்துப் பிரதேசங்களுக்கும் லிட்ரோ எரிவாயு விநியோகத்தில் 50 வீதத்தை நிறைவு செய்ய முடியும் என்று அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேல் மாகாணத்தில் எரிவாயுவின் தேவை குறிப்பிடத்தக்க வகையில் நிறைவேற்றப்பட்டுள்ளது எனவும் ஏனைய பிரதேசங்களுக்கு லிட்ரோ எரிவாயுவை விநியோகிக்கும் நடவடிக்கை 3 நாட்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டதாக லிட்ரோ எரிவாயு நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-7)

## பஸ்...

அமைச்சர் பந்துல குணவர்தன ஆலோசனை விடுத்துள்ளார்.

எரிபொருள் விலை குறைக்கப்பட்டுள்ளமைக்கு அமைய பயணிகளுக்கு பஸ் கட்டணங்களில் நிவாரணம் வழங்கப்படுவது அவசியமாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், பஸ் கட்டண திருத்தங்கள் இன்றைய தினம் அறிவிக்கப்படும் எனவும் அமைச்சர் பந்துல குணவர்தன குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## மதகுரு ஒருவர்...

பொலிஸ் தாக்கியதாக தெரிவித்து மக்கள் வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா நெளுக்குளம் நான்காம் கட்டை பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிலையத்தில் நேற்று எரிபொருளை பெற்றுக் கொள்வதற்காக நீண்டவரிசையில் மக்கள் நின்று கொண்டிருந்தபோது பொலிஸ் பொறுப்பதிகாரி ஒருவர் மதகுரு ஒருவரை தாக்கியதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து அங்கு நின்ற மக்கள் வவுனியா - மன்னார் பிரதான வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதோடு தாக்கப்பட்ட மதகுருவிடம் பொலிஸ் பொறுப்பதிகாரி மன்னிப்புக் கேட்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

இதனால் அங்கு பதற்ற நிலைமை காணப்பட்டதோடு நீண்டநேரமாக வவுனியா - மன்னார் பிரதான வீதியின் போக்குவரத்தும் ஸ்தம்பிதம் அடைந்திருந்தது.

இதனைத் தொடர்ந்து குறித்த இடத்திற்கு வருகை தந்த பொலிஸ் பொறுப்பதிகாரி தாக்கப்பட்ட மதகுருவிடம் மன்னிப்பு கேட்டதற்கு இணங்க ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது. (ம-7,299)

## பிரித்தானியா...

றுக்கு 5 மணித்தியாலங்கள் மின் வெட்டு ஏற்பட்டு, பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருந்தது. அதன் பின்னர் இரண்டு மாதங்களில் மின்துண்டிப்பு 3 மணித்தியாலமாக குறைக்கப்பட்டு விவசாயிகளுக்கு உரம் வழங்கப்பட்டு நாட்டில் எரிவாயு தட்டுப்பாடும் தீர்க்கப்பட்டுள்ளது.

ஜூலை மாதம் எரிபொருள் விநியோகத்திற்கு கடினமான காலமாக இருக்கும் என நான் முன்னதாக தெரிவித்த நிலையில், டீசல் இருப்புக்கள் பாதுகாக்கப்பட்டு விநியோகிக்கப் படுகின்றன, அதே நேரத்தில் ஜூலை 21 முதல் பெற்றோலும் விநியோகிக்கப்படும்.

ஏப்ரல் 21 தாக்குதலின் முழுமையற்ற தன்மை காரணமாக இங்கிலாந்து அரசாங்கம் மற்றும் அவர்களின் புலனாய்வு சேவைகளின் உதவியை கோருவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் 19ஆவது திருத்தச் சட்டம் மீண்டும் கொண்டு வரப்படும்.

நாட்டின் அமைதியை சீர்குலைக்க முயற்சிக்கும் சக்திகள் சமூகத்திற்குள் இருக்கின்றன. இந்தக்கூறுகள் நாட்டின் முன்னேற்றத்தை சீர்குலைப்பதில் இருந்து தடை செய்யப்படும்.

நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் கருத்து வேறுபாடுகளை ஒதுக்கி வைத்துவிட்டு, தனிநபரின் கருத்து வேறுபாடுகளால் நாடு பாதிக்கப்படுவதற்கு இடமளிக்க வேண்டாம். பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்கும் வகையில் அனைத்துக் கட்சி ஆட்சியை அமைக்க வேண்டும் என பதில் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## வாள்வெட்டு...

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் கூறினர்.

10 பேர் கொண்ட வன்முறைக் கும்பல் தாக்குதல் நடத்தியது. தாக்குதல் நடத்தியவர்களில் ஐவர் கைது செய்யப்பட்டதுடன் வாள் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்கு அண்மையாக நேற்றைய தினம் திங்கட்கிழமை நண்பகல் இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்கு குறித்த நபர் சென்று திரும்பியபோதே வீதியில் நின்ற 10 பேர் கொண்ட வன்முறைக் கும்பல் அவர் மீது வாள் வெட்டுத் தாக்குதல் நடத்திவிட்டு தப்பித்துள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த நபர் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

தாக்குதலின் போது வாள் ஒன்று உடைந்துள்ளது.

தாக்குதல் நடத்தியவர்களில் அளவெட்டியைச் சேர்ந்த ஐவர் தெல்லிப்பழை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-7,33)

## அவ...

ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத் வெளியிட்டுள்ள அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில், பொது பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் இலங்கை முழுவதும் நடைமுறைக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுப் பாதுகாப்பு, பொது ஒழுங்கைப் பாதுகாத்தல் மற்றும் சமூகத்தின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பொருட்கள் மற்றும் சேவைகளைப் பேணுதல் ஆகியவற்றின் நலன்களுக்காக இலங்கையில் பொது அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

பொதுப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பேரில் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. (ம-7)

## அவசரகால...

திப்படுத்துமாறும் சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

கருத்து வெளியிடும் உரிமை, பேச்சுச் சுதந்திரம், சுதந்திரமாக ஒன்றுகூடுவதற்கான உரிமை உள்ளிட்ட வெளிப்படுத்துவதற்கான சுதந்திரத்தை உறுதிப்படுத்துமாறும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் பதில் ஜனாதிபதியை வலியுறுத்தியுள்ளது.

இவை மக்களின் இறைமை எனவும் அதனை அரசாங்கமோ முகவர்களோ மீறுவதற்கு இடமளிக்க வேண்டாமெனவும் சங்கத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)




























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

பிறப்பு - 1982 இந்து
நட்சத்திரம் - உத்தரட்டாதி 3ம் பாதம்
கிரக பாவம் - 11 1/2
செவ்வாய் - 12
தகைமை / தொழில் - சுயதொழில்
எதிர்பார்ப்பு - நற்குணமுள்ள அழகிய பெண்
(12177)
தொடர்பு இலக்கம்
**077 388 1756**

## வீடு வாடகைக்கு தேவை

யாழ்.நகரை அண்மித்த பகுதியில் சிறிய குடும்பம் ஒன்று வசிக்கக் கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குத் தேவை.

**077 745 1625**

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603, 076 097 3127**

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (12184)

**076 825 7716** (ஆகாஸ்)

## பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
**V2 TRAVELS**
(C-4608)

எமது கிளைகள்

● வேலையின்போது ஆரம்ப சம்பளம் -25,000/-

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம். **0777-068-777**

## உடனடி வேலை வாய்ப்புக்கள்

**EXECUTIVE OFFICER**

✔ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/=
✔ வயது - 22 தொடக்கம் 35
✔ தகுதி - பட்டதாரிகள்
(C-4608)
**V2 TRAVELS**

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் **0777-068-777**

மீண்டும் இலவசம்...

## விடுதலைப் பெருவிழா

கவலை, கண்ணீர்,
தீராத வியாதி, பிசாசின்பிடி,
பில்லி-சூனியக்கட்டு, பாவங்கள்,
பரம்பரை சாபங்கள்,
அடிமைத்தனம் ஆகியவற்றிலிருந்து

**இயேசு விடுதலை கொடுக்கிறார்!!!**

இடம்:— நாற்சதுர சுவிசேஷ சபை,
முத்திரைச் சந்தி, நல்லூர்.

20 ஆடி 2022
மாலை 4.00

இலங்கை நாற்சதுர சுவிசேஷ சபை, நல்லூர்.
673, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்.
021 222 6730
(12179)

## காணி விற்பனைக்கு

யாழ். நாவற்குழி சந்தியில் 87 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

❖ A9 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்.
❖ நாவற்குழி சந்தியில் இருந்து 500m தூரத்தில்.
❖ மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
❖ A9 வீதியில் இருந்து 200m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை நான்கு இலட்சம் (400,000/=) மட்டும்.
❖ இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்.

❖ பார்வையிடும் நேரம் : காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

(12186)

**076 490 5403, 076 491 2493, 076 490 6029**


# மரண அறிவித்தல்

## திருமதி சிவகனகாம்பிகை பொன்னம்பலம்



அன்னை மடியில் :- 18.09.1944 | இறைவன் அடியில் :- 16.07.2022

இளவாலை வடக்கு, சோடக்கண் வீதியை பிறப்பிடமாகவும், அலவத்தை, அளவெட்டி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவகனகாம்பிகை பொன்னம்பலம் அவர்கள் கடந்த 16.07.2022 (சனிக்கிழமை) அன்று இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபாபதி (சின்னவர்) - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பொன்னம்பலம் அவர்களின் அன்பு மனைவியும் உமா (லண்டன்), முரளி (லண்டன்), ஆதவன் JP ( ஆசிரியர் - யா/ பன்னாலை சேர்கனகசபை அ.த.க. பாடசாலை, வலி வடக்கு பிரதேச சபை உறுப்பினர்), உஷா (கொழும்பு), கீதா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான சிவயோகேஸ்வரி, சிவகனகேஸ்வரன், சிவகௌரி மற்றும் சிவசாந்தராயினி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சந்திரகுமார், கஜேந்தினி, சிவசாம்பவி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், தெல்லிப்பளை), பிரபாகரன், ஜெயகஜன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், வட்டுக்கோட்டை), சபாரத்தினம் (சோமு-லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் சாம்பவி, சரண், ஹரிஸ்மிதா, சகானா, கிருஸ்டிகன், அட்சரன், ஜஷ்வினி, ஆருஷா, அபிநிஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.07.2022) செவ்வாய்க்கிழமை மு.ப 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
முரளி (UK) : 00447931312372
ஆதவன் : 077 720 4405

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.07.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.